
SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Volume:1, Issue: 11, Pages:56
June -2022, Price Rs.5/-
திருமலை திருப்பதி தேவஸ்தானம்
ஸப்தகிரி
சமய மாத இதழ்
ஜீன் 2022, விலை ரூ.5/-
வைர அங்கி
12.06.2022
முத்து அங்கி
13.06.2022
தங்க அங்கி
14.06.2022
திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
12-06-2022 முதல் 14-06-2022 வரை

15.04.2022 அன்று ஆந்திர மாநிலம், ஒண்டிமிட்டாவில் நடைபெற்ற ஸ்ரீசீதாராம திருக்கல்யாண மஹோத்ஸவத்தை முன்னிட்டு மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு.ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்கள் ஆந்திர மாநில அரசு சார்பில் பட்டாடை, முத்துக்களை ஸ்ரீகோதண்டராம ஸ்வாமிக்கு சமர்பித்தபோது. இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்












நிஹத்ய த$_{4}$ார்தராஷ்ட்ராந்ந:
கா ப்ரீதி: ஸ்யாஜ்ஜநார்த$_{3}$ந ।
பாபமேவாச்ரயேத$_{3}$ஸ்மாந்
ஹத்வைதாநாததாயிந: ॥

ஜனார்தனா! திருதராஷ்டிர குமாரர்களைக் கொன்று, நமக்கு என்ன மகிழ்ச்சி ஏற்படப் போகிறது? இந்தப் படுபாவிகளைக் கொன்றால் நம்மைப் பாவம்தான் வந்தடையும்.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–36*

*கொலுவை உன்னாடு வீடே கோவிந்தராஜு*
*கொல கொல நேகி வச்சே கோவிந்தராஜு*

*கொடுகுல நீடல கோவிந்தராஜு*
*குடிகொன்ன படிகெல கோவிந்தராஜு*

*குடியெடம காந்தல கோவிந்தராஜு*
*கொடிசாகே புவுஜுல கோவிந்தராஜு*

*கொப்ப கொப்ப பூதண்டல கோவிந்தராஜு*
*குப்பேடி விஞ்ஜாமரல கோவிந்தராஜு*

*கொப்புபை சந்குல தோடி கோவிந்தராஜு*
*குப்பி கடராமு தோடி கோவிந்தராஜு*

*கொரபு சிங்காரால கோவிந்தராஜு*
*குருலு துவ்விஞ்சுகொனி கோவிந்தராஜு*

*திருபதிலோ நனு திரமை ஸ்ரீ வேங்கடாத்ரி*
*குரிஸீ வரமு லெல்ல கோவிந்தராஜு*

ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி தன் திருமுடியை விந்தையாக அழகுடன் கொண்டையாக மாற்றிக்கொண்டு, கொண்டையைச் சுற்றி மலரால் அலங்கரித்துக் கொண்டுள்ளார். சிறந்த நறுமணம் மிக்க மலர் மாலைகளை அணிந்துள்ளார். மேலும், பொன்னாலான நந்தகவாளினைத் தரித்து, இருபுறமும் தன் உபய தேவியருடன் வீற்றிருக்கின்றார். தன் பணியாட்கள் மூலம் விஞ்ஜாமரத்தை வீசிக் கொள்கிறார். அனந்த சேஷனின் திருப்பட நிழலில் வேங்கடாத்ரியிலும், திருப்பதியிலும் கொலுவீற்றிருக்கின்றார். தன்னை நாடிவரும் பக்தர்களின் தோஷம், இம்சை, பாபம், கவலை போன்ற வற்றை போக்கி கோவிந்தராஜ ஸ்வாமி அருள் புரிகின்றார்.

*– அன்னமய்யா கீர்த்தனை,*
*தொகுதி 13–168*






திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# "நமாமி கோவிந்தா"

## பஞ்சகவ்ய பொருட்கள் விற்பனை மையத்தின் விலைப்பட்டியல்

| எண் | பொருட்களின் பெயர் | எடை/ கொள்ளளவு | விலை (ரூ.) |
|---|---|---|---|
| 01. | அவனி – தூப் சூர்ணம் | 50 கி | 70.00 |
| | | 100 கி | 115.00 |
| 02. | தரணி–தூப் அகர்பத்தி | 12குச்சிகள் | 60.00 |
| | | 24 குச்சிகள் | 110.00 |
| 03. | தாத்ரி–தூபம் கப்ஸ் | 6 கப்ஸ் | 70.00 |
| | | 12 கப்ஸ் | 110.00 |
| 04. | வைஷ்ணவி – தூபம் | 20 குச்சிகள் | 30.00 |
| 05. | வராஹி–தூபம் கோன்ஸ் | 12 கோன்ஸ் | 30.00 |
| | | 24 கோன்ஸ் | 50.00 |
| 06. | ப்ருத்வி – விபூதி | 10 கிராம் | 30.00 |
| | | 30 கிராம் | 40.00 |
| | | 50 கிராம் | 60.00 |
| | | 100 கிராம் | 100.00 |
| 07. | தன்ஷிக–பற்பொடி | 50 கிராம் | 40.00 |
| | | 100 கிராம் | 60.00 |
| 08. | ஹிரண்மை – ஃபேஸ் பேக் | 50 கிராம் | 110.00 |
| | | 100 கிராம் | 200.00 |
| 09. | மஹி – சோப்பு | 25 கிராம் | 40.00 |
| | | 75 கிராம் | 80.00 |
| | | 100 கிராம் | 110.00 |
| 10. | கஸ்யபி – ஷாம்பு | 5 மி.லி. | 10.00 |
| | | 100 மி.லி. | 210.00 |
| 11. | ஊர்வி – நாசல் ட்ராப்ஸ் | 10 மி.லி. | 100.00 |
| 12. | நந்தினி – கோ ஆர்க் | 200 மி.லி. | 50.00 |
| | | 500 மி.லி. | 110.00 |
| | | 1 லிட்டர் | 200.00 |
| 13. | பூமி – ப்ளோர் கிளீனர் | 1 லிட்டர் | 250.00 |
| | | 5 லிட்டர் | 1050.00 |
| 14. | க்ஷம – பசுமாட்டு சாண வறட்டி | 10 | 140.00 |
| | | 12 | 170.00 |
| 15. | பூவட்டி – பசுமாட்டு சாணக்கட்டை | 06 | 90.00 |
| | | 12 | 180.00 |




வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மலர் 01 இதழ் 11

ஜூன் 2022



*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. A.V. தர்மா ரெட்டி,** ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர் (F.A.C), தி.தி.தே.
*வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :*
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
*ஆசிரியர் :*
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
*அச்சிடுபவர் :*
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**

*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**

நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**


| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை

பக்கம்


திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் :
நின்னருளே புரிந்திருந்தேன் 7
- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : ஆத்மவான் 11
- ஸ்ரீ உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.

நம்மாழ்வாரின் திருவாழ்மொழிச் சிறப்பு 14
- ஸ்ரீ உ.வே. முனைவர் கோ.க.அ.ரங்கராஜன் ஸ்வாமி, திருப்பதி,

ஜோதிட சாஸ்திரம்:வக்கிரமான கிரகங்கள் கொடுக்கும் பலன்கள் 18
- முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, திருவல்லிக்கேணி.

தாய்மையான திருமலை பசுமையான திருமலை 21
- திரு.அத்தி ரங்கநாதன்,திருப்பதி.

தி.தி.தே. பஞ்ச கவ்ய பொருட்கள் 25

யோகம் ஒரு தெய்வீகம் - திரு.பிரபோதரன் சுகுமார், சென்னை. 31

108 திவ்யதேச வைபவம் – திருநாவாய் 34
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்
திருநாமமும் உரையும்
- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. 37

ஸ்ரீமத் பகவத்கீதை - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். 40

அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : சிகண்டி
- திரு. எஸ்.ஸ்ரீதுரை, சென்னை. 42

ராசிப்பலன்கள்:ஜூன் 2022 -முராரி. எம்.வி. நரநாராயணன், சேலம். 46

ஆயுர்வேதம் – வெண்டைக்காய் - திருமதி வி.உஷா, திருப்பதி. 47

நீதிக்கதைகள் : வாழ்முறைக்கான கீதை 50
- திருமதி பா.காயத்ரி, சென்னை.

சித்திரக்கதை : ஸ்ரீநம்மாழ்வார் 52


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : வைரம், முத்து, பொன் அங்கிகளணிந்த திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.

பின்னட்டை : உபய நாச்சிமார்களுடன் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி, திருப்பதி.

உங்களுடன்...



# புனிதமான மலர்களால் தயாராகும் பொருட்கள்

கலியுக கண்கண்ட தெய்வமாம் திருவேங்கடமுடையான் அர்ச்சை வடிவில் கொலுவீற்றிருக்கும் திருமலை நித்ய கல்யாணம் பச்சை தோரணமாய் விளங்குகின்றது. தினமும் திருவேங்கடமுடையானுக்கு அதிகாலை சுப்ரபாத சேவை முதற்கொண்டு இரவு ஏகாந்த சேவை வரை தினமும், வாரம், பக்ஷம், மாதம், வருடாந்திரம் என நடைபெறுகின்ற அனைத்து உற்சவங்களின் போதும் பல்வேறு விதமான மலர்களால் வெவ்வேறு வகையான மாலைகள் தொடுத்து ஸ்வாமிக்கு அலங்கரிக்கின்றனர். அம்மலர்கள் மிகவும் நறுமணத்துடன் ஸ்வாமியின் திருவுள்ளம் உகக்கும்படி உள்ளன.

திருவேங்கடமுடையான் புஷ்ப அலங்காரப்பிரியன். திருமலை திவ்ய திருத்தலமே "புஷ்ப மண்டபம்" இது குறித்தே *"சிந்துப்பூ மகிழும்! திருவேங்கடம்"* என நம்மாழ்வார் பாசுரமிட்டுள்ளார். இவ்வகையில் திருவேங்கடமுடையானுக்கு தினமும் நடைபெறுகின்ற மலர் கைங்கர்யத்தை "யமுனைத் துறை" எனும் பெயரிலேயே இன்றும் செய்கின்றனர். அன்று திருமலையில் மலர் கைங்கர்யத்திற்காக இராமாநுஜர் பெயரில் நந்தவனம் ஒன்று அமைத்து தனியாக ஒரு குளத்தையும் வெட்டினவர் ஸ்ரீஅனந்தாழ்வானாவார்.

திருவேங்கடமுடையானுக்கு மலர் கைங்கர்யம் செய்வதற்கென்றே திருமலையில் பல்வேறு வகையான மலர்களைக் கொண்ட நந்தவனங்களும், திவ்ய வனங்களும் பல உள்ளன. அவ்வனங்களில் மலரும் மலர்களையே ஸ்வாமி கைங்கர்யத்திற்கு மலர் மாலைகளாகக் கட்டப்படுகின்றன. திருவேங்கடமுடையானுக்கு மட்டுமேயன்றி பிற தேவதா மூர்த்திகளின் கைங்கர்யங்களுக்கும் மலர்மாலைக் கட்டப்படுகின்றன. இவ்வாறாக ஸ்வாமிக்கு அலங்கரிக்கப்படும் இம்மலர் மாலைகள் களைந்த பிறகு திருமலையில் உள்ள தங்கக் கிணற்றில் இடுவது வழக்கம். திருமலையில் மலர்கள் யாவும் ஸ்வாமி அலங்கார சேவைக்கு மட்டுமே தவிர மற்றவர்கள் அதை பயன்படுத்தக் கூடாது எனும் நியதி உள்ளது. ஸ்வாமிக்கு அலங்கரிக்கப்படும் மலர்கள் பக்தர்களுக்கும் வழங்கப்பட மாட்டாது. இது இங்குள்ள வழக்கமாகும்.

இப்படி புனிதமான மலர்கள் வீணாகுதல் கூடாது எனும் எண்ணத்தில் தி.தி.தே. ஒரு புதுமையான செயல் திட்டத்தை வகுத்தது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக உலர்ந்த மலர் மாலைகளை தொழில்நுட்பத்துடன் வடிவமைத்து புகைப்படம், சாவிக்கொத்து, பேப்பர் வெயிட், பேனாக்கள் ஸ்டேண்ட் போன்றவற்றை தயார் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது. அவ்வாறே ஏழு வகையான நறுமணம் மிக்க அகர்பத்திகளும் தயாரிக்கப்படுகின்றன. இத்தயாரிப்புகள் யாவும் தி.தி.தே. விற்பனை மையங்கள் மற்றும் தி.தி.தே. ஆலயங்களில் மலிவு விலைக்கு விற்கப்பட்டும் வருகின்றன.

இவ்விதமாக எம்பெருமானுக்கு பயன்படுத்தப்படும் மலர்களால் செய்யப்படுகின்ற இப்பொருட்கள் நம் இல்லங்களில் இருப்பதனால் ஸ்வாமி நம் இல்லத்தில் கொலுவீற்று, நம்மிடையே இருப்பது போன்ற எண்ணம் எழும். அமைதியான சூழல், நல் மனஅமைதி, உளவியல் மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கு இப்பொருட்கள் நற்பலன்கள் நல்கும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. எனவே, பக்தர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு எம்பெருமானின் அருளுக்கு பாத்திரமாவார்களாக.

திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம்

# நின்னருளே புரிந்திருந்தேன்

**சென்னியோங்கு தண் திருவேங்கட**
**முடையாய் உலகு**
**தன்னைவாழ நின்றநம்பீ தாமோதரா சதிரா**
**என்னையும்**
**என்னுடைமையையும் உன் சக்கரப்பொறி**
**யொற்றிக் கொண்டு**
**நின்னருளே புரிந்திருந்தேன் இனி என்**
**திருக்குறிப்பே.**

பெரியாழ்வார் திருமொழியில் நிறைவுப் பதிகம்.

தொடங்கும்போதே கம்பீரமாக திருமலை அப்பனை அழைத்துப் பாடும் பாசுரம்.

கிராமங்களில் இராமாநுஜர் காலத்திலிருந்தே ஆழ்வார்களின் பாசுரங்களைப் பாடும் நாம சங்கீர்த்தன பஜனை கூடங்கள் அதிகமுண்டு. ஸ்ரீமத் ராமாநுஜர், கிராமங்களில் எல்லாம் வைணவ சித்தாந்தம் பரவ வேண்டும் என்று ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் செய்த ஏற்பாடு, இன்றைக்கும் பலன் தந்து கொண்டிருக்கிறது. சனிக்கிழமை ஏகாதசிகளில் அங்கு பஜனை நடைபெறும். அதில் இரண்டு பகுதி உண்டு.

முதல் பகுதியில் திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி அவசியம் பாட வேண்டும். இரண்டாம் பகுதியாக அந்தந்த ஆழ்வார்கள் திருநட்சத்திரத்திற்கு ஏற்றவாறு அவரவர்கள் பாசுரங்கள் பாடப்படும். முடிவில் வழக்கமான சாற்று முறை நடைபெறும். இதில் பெரியாழ்வார் திருமொழி "சென்னி யோங்கு தண்" என்று தொடங்கும் பதிகம் தவறாது இடம்பெறும்.

காரணம், இப்பாசுரத்தில் திருமலை அப்பனைப் பற்றி ஆழ்வார் பாடுவது மட்டுமல்ல. ஓர் வைணவனின் நிறைவு நிலை (சரம நிஷ்டை) எப்படி இருக்க வேண்டும் என்ற அற்புதமான வெளிப்பாடு தான் இந்தப் பதிகம்.

பெரியாழ்வார் பல இடங்களில் திருமலையைப் பற்றியும், திருமலையப்பன் பற்றியும் குறிப்பிடுகிறார். எம்பெருமானின் சிறப்புகளையும் குறிப்பிடுகிறார். அவர் பாடிய பிள்ளைத் தமிழில் பல இடங்களில் திருமலை அப்பனின் பெருமை வருகிறது.

***''வித்தகன் வேங்கட வாணன் உன்னை விளிக் கின்ற கைத்தலம் நோவாமே அம்புலி கடிது ஓடிவா''*** என்று பாடுகிறார்.

இன்னொரு இடத்தில் ***''மன்னு நமுசியை வானில் சுழற்றிய மின்னு முடியானே, அச்சோ அச்சோ வேங்கடவாணனே, அச்சோ அச்சோ''***

***''தென்னிலங்கை மன்னன் சிரம் தோள் துணி செய்து மின்னில லங்கு பூண் விபீடண நம்பிக்கு என்னி லங்கு நாமத்தளவும் அரசென்ற மின்னிலங்காரற்கு ஓர் கோல்கொண்டுவா வேங்கட வாணர்க்கு ஓர் கோல்கொண்டுவா''*** என்ற பதிகத்தில் இராமபிரானை வேங்கடவாணனாகக் கூறுகிறார். இன்னொரு இடத்தில் ***''குன்றெடுத்தாய், குடமாடு கூத்தா,***

–பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி,
94434 39963.



*வேதப்பொருளே, என் வேங்கடவா, வித்தகனே, இங்கே போதராயே"* என்று விளித்துப் பாடுகின்றார்.

இனி, சென்னியோங்கு தண் பாசுர கருத்துக்கு வருவோம்.

இப்பாடலில் அவர் சொல்லும் கருத்து.

1) உயர்ந்த மலைச் சிகரம் வேங்கடம். அதன் குளுமை அற்புதமானது. *"ஸ்ரீவேங்கடாத்ரி சிகராலய காளமேகம்"* அல்லவா.

2) உடையாய் என்பதால் அங்கேயே மன்னி நின்றான். *"பரன் சென்று சேர் திருவேங்கட மாமலை, ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே"* என்பது ஆழ்வார் பாசுரம்.

3) புருஷகாரம் இருந்தால் நம் பிரபத்தி செல்லுபடி யாகும். இங்கே ஸ்ரீசப்தம் சேர்ந்தே திருமலை திருவேங்கடம் என்று வருகின்றது. இங்கே தான் *"அகலகில்லேன் இறையும் என்று அலர்*

## குந்தி தேவியின் பக்தி

பஞ்ச பாண்டவர்களின் அன்னை குந்திதேவி கிருஷ்ண பரமாத்மாவிடம் மாறாத அன்பும் தீராத பக்தியும் கொண்டிருந்தாள்.

தன்னிடம் பக்தியும் அன்பும் வைத்துள்ள குந்திதேவிக்கு ஏதேனும் அருள் செய்ய நினைத்தான் கண்ணன்.

அதனால் எதுவானாலும் தருகிறேன் என்றான். குந்திதேவி நீண்ட நேரம் சிந்தித்து ஒரு வரம் கேட்டாள்.

"கண்ணா! நாள்தோறும் எனக்கு ஏதேனும் துன்பம் வர வேண்டும். இது தான் நான் உன்னிடம் கேட்கும் ஒரே வரம் என்றாள்.

இதைக்கேட்ட கண்ணன் வியப்பு அடைந்தான்.

என்னிடம் பலர் நீண்ட ஆயுள், நிறைந்த செல்வம் இவை போன்ற பிற பேறுகளைத்தான் வரமாகக் கேட்டுள்ளார்கள்.

இது போன்ற வரத்தை யாரும் என்னிடம் கேட்டதே இல்லை.

நீ மட்டும் எதற்காக இப்படி ஒரு வரத்தை விரும்புகிறாய்? என்று கேட்டான்.

அதற்கு குந்தி தேவி "நான் நாள்தோறும் உன்னை நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும்"

ஆனால், துன்பம் வந்தால்தான் உன்னை நினைக்க முடிகிறது. அதனால்தான் அப்படிப்பட்ட வரம் கேட்டேன் என்றாள் குந்திதேவி.

நியாயமான வரம் தானே...



தொகுப்பு : திரு. எம். இராதா கிருஷ்ணன், வாணியம்பாடி.

*மேல் மங்கை உறை மார்பா"* என்று நம்மாழ்வார் பகவானிடத்தில் சரணம் புகுகின்றார்.

திருவோடு கூடிய திருமலையப்பனிடம்தான் சரணடைகிறார்.

4) இந்த மலையில் ஏன் வந்து இருக்கின்றான் என்றால், இந்த உலகம் வாழ்வதற்காக வந்து நிற்கிறான்.

*"உலகு தன்னை வாழ நின்ற நம்பி"* அவன் படைத்த உலகம் வாழ்வதன் மூலமாக, எம்பெருமான் தான் வாழ்வதாக நினைக்கிறான். மகிழ்கிறான்.

அதற்காகத்தானே பரமபதத்தை விட்டு இங்கே வந்து நிற்கிறான். *"தாமின் புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்"* என்பது குறள்.

உலகு என்பது இடவாகுபெயர். எல்லா உயிர்களும் இன்புற்று வாழ திருவேங்கடத்தில் வந்து நிற்கிறான். அதனால் திருமலையில் சகல உயிர்களும் வசிக்கின்றது.

குலசேகர ஆழ்வாரும் *"மீனாய்ப் பிறக்கும் விதி உடையேன் ஆவேனே"* என்றும், *"குருகாய்ப் பிறப் பேனே"* என்றும் பல படியாகச் சொல்லி, கடைசியில் *"திருமலையில் ஏதேனும் ஆவேனே"* என்றல்லவா நிறைவு செய்கின்றார்.

இத்தனைச் சிறப்புகளையும் முதல் வரியில் சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையான் என்று சொல்லிவிடுகிறார்.

திருமலையப்பன் உயர்வற உயர்நலம் உடையவன். அயர்வறும் அமரர்கள் அதிபதி. ஆனால் எளிமையானவன். சௌலப்ய விசேஷம் மிக்கவன். அதனால் அவனை "தாமோதரா" என்று அழைக்கிறார்.

ஒருவன் எளிமையானவனாக சௌலப்யம் மிகுந்தவனாக இருப்பது பெரிய விஷயமில்லை. அப்படி இருந்ததை பட்டம் கட்டிக் கொண்டிருப்பது எளிமையிலும் எளிமை.

தாமம் என்றால் கயிறு. உதரம் என்றால் வயிறு.

யசோதை ஒரு சின்ன தாம்புக் கயிற்றைக் கொண்டு கிருஷ்ணனின் இடுப்பில் கட்டினாள். அந்தக் கட்டை, இன்று வரை, "இதோ பார், என் அம்மா கட்டிய கட்டு" என்று காட்டிக் கொண்டு நிற்கிற பெருமை வேறு யாருக்கு வரும்?

**வாசகர்களே...**

**ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்திய வாசம் செய்யும் கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்களுடைய வாழ்வில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அதாவது ஸ்வாமியின் திருலீலைகளை ஸப்தகிரி பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏதுவாக அதை எழுதி ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

*எங்கள் முகவரி :*

**பிரதான ஆசிரியர்,**
**"ஸப்தகிரி", தி.தி.தே.,**
**கபிலத்தீர்த்தம் சாலை,**
**திருப்பதி - 517 507.**
**0877 - 2264543, 2264359.**

காரணம் அவன் பத்துடை அடியவர்க்கு எளியவன்.

பிறர்க்கு அரிய வித்தகன்.

"வேங்கட வாணனை நம்பி" என்று பெரியாழ்வார் இந்தப் பாசுரத்தில் அழைக்கின்றார். நம்பி என்றால் குண பூர்த்தி உடையவன் என்று பொருள். அவன் அருளை நம்பித்தானே தினம் தினம் லட்சக்கணக்கில் மக்கள் கூடுகிறார்கள்.

அடுத்து "சதிரா" என்றழைக்கின்றார். அடியார் குற்றத்தை கண்ணெடுத்தும் பாராதவன். சதிர் என்ற சொல்லுக்கு பல பொருட்கள் உண்டு. திறமை மிகுந்தவன், அழகு மிகுந்தவன் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். திருமலை ஊரும் பேரும் அவனுக்குப் பெருமையும் அழகும் தருபவை தானே.

அடுத்து இவர் என்ன செய்தார்? வைஷ்ணவ பக்தி லட்சணம் எப்படி இருக்க வேண்டும் என்று காட்டினார்.

*"என்னையும் என் உடைமையையும் உன் சக்கரப் பொறி ஒற்றிக் கொண்டு"* என்பது அடுத்த பாசுர வரி.

பஞ்ச சம்ஸ்காரம் வைணவர்களுக்கு முக்கியம்.

“என்னை” என்பதால் ஆத்மாவையும், “என் உடமை” என்பதால் சரீரத்தையும் சேர்த்துச் சொல்லுகின்றார்.

எல்லாத்துக்கும் திருவிலச்சினை பண்ணிவிட வேண்டும். அப்போது தான் இந்தச் சரீரமும் ஆத்மாவும் அவனைச் சேர்ந்தது, அவன் உடமை என்று தெரியும்.

அந்தக் காலத்திலே இரவல் பொருள் கொடுப்பார்கள். பெயர் குறித்துக் கொடுப்பார்கள். காரணம் திரும்பக் கொண்டுபோய் உடையவரிடம் கொடுப்பதற்கு அது அவசியமான அடையாளம்.

எம்பெருமான் கொடுத்த தேகமும், அவன் உடைமையான ஆன்மாவும் அவனிடமே போய்ச் சேர வேண்டும். அந்த அடையாளத்தில் ஒன்றாக பகவானின் சக்கரப்பொறியை தோளில் ஒற்றிக் கொள்கிறார்கள்.

இன்னொரு அர்த்தம். வைணவர்களின் திருமாளிகையிலும் சரி, அங்கே உள்ள பண்ட பாத்திரங்களிலும் சரி, எம்பெருமானுக்கு உரியது என்பதால், சங்கு சக்கரம் முத்திரை போட்டு இருப்பார்கள். அப்படி சங்கு சக்கரம் இல்லாத பாத்திரத்தில் தளிகை செய்ய மாட்டார்கள். அது ஒரு வகையான நிலை.

இப்படி பஞ்ச சம்ஸ்காரம் செய்து கொண்டு அடுத்து பொறுப்பு துறப்பு செய்ய வேண்டும். இதனை அடுத்த வரியிலேயே ***“நின் அருளே புரிந்து இருந்தேன் இனி என் திருக்குறிப்பே”*** என்று கூறுகிறார் பெரியாழ்வார்.

ரயில்வே ஸ்டேஷன் போய் விட்டோம். பயணச் சீட்டு வாங்கி விட்டோம். இனி ஒரு பயணிக்கு என்ன வேலை? தொடர் வண்டிக்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டும். அதுவரை காலம் போக காலட்சேபம் செய்ய வேண்டும். இனி எளிமையான பாகவத நெறி. அதற்கு மேல் செய்வதற்கு எதுமில்லை.

இனி என் கையில் ஒன்றுமில்லை. ***“நின் அருளே புரிந்து இருந்தேன் இனி என் திருக்குறிப்பே”*** என்கிறார்.

இப்பாடலின் சுருக்கம் இதுதான். பெருமான் ஸ்ரீமந்நாராயணன் நமக்காக திருமலையில் எழுந்தருளியிருக்கிறான். நாம் ஒரு ஆசார்யன் கையால் பஞ்ச சம்ஸ்காரங்கள் செய்து கொண்டு இனியாவும் அவன் திருவுளப்படி நடக்கட்டும் என்று இருப்பது தான் வைணவனுக்கு அழகு.

வைணவ தத்துவத்தை மிக எளிதாகப் புரிந்து கொள்ள இந்தப் பாசுரம் உதவும். இனி வியாக்யான பத்ததியையும் சேவித்து விடுவோமே!

எம்பெருமானே! நெடுநாளாய் உன் திறத்தில் விமுகனாய் விஷயாந்தரங்களை நச்சி அங்குமிங்கும் அலைந்து திரிந்த அடியேனை, உனது திவ்ய கல்யாண குணங்களைக்காட்டி வசப்படுத்திக் கொண்டு, ஆத்மாத்மீயங்களையெல்லாம் உனக்கே சேஷப்படுத்திவிட்டு உன் அருளையே புருஷார்த்தமாகப் பிரதிபத்தி பண்ணிக் கொண்டிருக்கும்படியான நிலைமையையும் அடியேனுக்கு அமைத்தருளினாய், இதனால் உன் அபேக்ஷிதமும், தலைக்கட்டிற்று. என் அபேக்ஷிதமும், தலைக்கட்டிற்று. இனிச் செய்ய வேண்டுவதொன்றில்லை; இன்னும் என் செய்ய வேணுமென்ற உன் திருவுள்ளத்தில் ஓடுகிறது என்று கேட்கிறபடி.

திருவேங்கடத்துக்குத் தண்மை – ஸம்ஸார தாபங்களை ஆற்றவற்றாயிருக்கை. உடையாய் – உடையான என்பதன் ஈறு திரிந்தவிளி. வாழ – பிற வினையில் வந்த தன் வினை; என்பர் வடநூலார். “உலகு தன்னை” என்பதை உருபு மயக்கமாகக் கொண்டால், உலகத்தவர்கள் வாழும்படி நின்ற நம்பீ; என்று உரைக்கலாம்.

தாமோதரன் – கண்ணிநுண் சிறுந்தாம்பினாற் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயனாதலால், அத்தாம்பின் தழும்பு திருவயிற்றில் தோன்றப் பெறவனென்றபடி. சதிர் – ருஜுவாயிருக்குந் தன்மை. கீழ் திருப்பல்லாண்டில், தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச்சக்கரத்தின், கோயிற் பொறியாலே யொற்றுண்டு நின்று” என்றதை, இப்பாட்டில் மூன்றாமடியால் விவரிக்கிறார். ஆத்துமாவுக்குச் சக்கரப்பொறி யொற்றுகையாவது – அநந்யார் ஹசேஷத்வஜ் ஞாநத்தைப் பிறப்பிக்கை. அது பிறந்தமை தோற்றவிறே தோளுக்குத் திருவிலச்சினையிடுவது. “நின்னருளே புரிந்திருந்தேன்” என்றது – உபாயாந்தரத்திலும் ருசிகுலையப் பெற்றேன் என்றபடி.

பாசுரம் படிப்போம்...

## ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்

# 12 ஆத்மவான்

- ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி,
சென்னை.



***ஜீவாத்மாவின் தன்மையுடையவனைப் போலத் தோன்றுபவன்; ஆயினும் பரமாத்மாவின் தன்மையையே உடையவன்.***

### அரண்மனையில் காணோம்! ஆச்ரமத்தில் தேடு!

ஒரு ஜீவன் தன்னை உயர்த்திக் கொள்ள முக்யமான வழி – சான்றோர்களது உபதேசங்களைக் கேட்பது. "செல்வத்துட்செல்வம் செவிச் செல்வம்" எனும் முதுமொழியின்படி இராமன் கேள்வி ஞானத்தில் சிறந்தவன். இறைவனின் அவதாரமாக இருப்பினும் வசிஷ்டரிடம் கல்வி கற்றான். அது போதாது என்று பல மஹரிஷிகளிடம் தொண்டு புரிந்து சிறந்த கல்விகள் பல கற்றான். ஒவ்வொரு ஆழ்ந்த தர்மக் கருத்தையும் பலரிடம் பல முறை வணக்கத்தோடு கற்றான். அரண்மனையில் அவனைக் காணவில்லையானால் எவராவது ஒரு ரிஷிக்கு அருகே அமர்ந்திருப்பானாம்!

## மங்கள சுலோகங்கள்

*மூலதோ ப்ரஹ்மரூபாய மத்யதோ விஷ்ணுரூபிணே ।*
*அக்ரதஹ் சிவரூபாய வ்ருக்ஷராஜாய தே நமஹ ॥*

**அடிப்பகுதி பிரம்மா உருவினதும், நடுப்பகுதி விஷ்ணு உருவினதும், நுனிப்பகுதி சிவனது உருவினதுமான, மரங்களில் அரசனான (அரச) மரமாகிய உனக்கு வணக்கம்.**



சான்றோர் வாக்கின் சிறப்பை உணர்த்த இறைவனே ஒரு ஜீவனைப் போல் பிறக்கும்போது, ஜீவர்களாகிய நாம் வாரத்துக்கு ஒரு முறையாவது நல்ல உபதேசங்களைக் கேட்க வேண்டும் அல்லவா!

### என்னை தெய்வமாக்காதீர்கள்; மனிதனாக ஏற்றுக் கொள்ளுங்கள் !

இராம–இராவண யுத்தம் முடிந்தது. ஆகாயத்தில் கூடிய தேவர்கள் இராமனை "ராமா! ஸ்ரீமந் நாராயணனான தாங்கள் எங்களுக்காக மனிதனாகப் பிறந்தீர்!" என்று புகழ்ந்தனர். அதைப் பணிவோடு மறுத்த இராமன் "என்னை மனிதனாகக் கொள்ளுங்கள்; அதிலும் தயரதன் மைந்தனாக உணருங்கள்"! என்று தன் விருப்பத்தை வெளியிட்டான். உலகைப் படைக்கும் பரமனுக்கு மனிதப் பிறவி அளிக்கும் பாக்யம் பெற்றான் தயரதன். தனக்கென்று பட்டமும் பெருமையும் இருந்தாலும் தன் பெற்றோரால் கிடைக்கும் பெருமையே ஒருவனுக்குத் தலையானது.

### மறைக்க முடியாத தெய்வத்தன்மை !

இராமன் எத்தனைதான், தான் தெய்வம் என்பதை மறைக்கப் பார்த்தாலும் அது தானாகவே வெளிப்பட்டது. சபல புத்தி உடைய குரங்குகள் மற்றும் சிறு அணில்களின் உதவியோடு பெரும் கடலில் அணை கட்டியது மனிதர்களால் சாதிக்க முடியாதது.

ஐந்து நாட்களில் நூறு யோஜனை நீளமான அணையை இராமன் எளிதாகக் கட்டு வித்தார். இன்று யாரேனும் "கிழக்குக் கடலில், தனுஷ் கோடியில், மனிதன் கட்டிய எந்த அமைப்பும் இல்லை" என்று கூறினால், அவர்கள் "அதை தெய்வம்தான் கட்டியது" என்று மறைமுகமாகக் கூறுகிறார்கள் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

இராமர் கட்டிய பாலத்தை தரிசித்தால் புண்யம் கிட்டும்: இராமரையே பாலமாகப் பற்றினால் முக்தியே கிட்டும்.

### அயோத்தி வைகுந்தத்திற்குக் குடிபெயர்ந்தது !

இராமன் இவ்வுலகில் பதினோராயிரம் ஆண்டுகள் வாழ்ந்து, பின் வைகுந்தத்திற்குத் திரும்ப எண்ணினார். தனது உயர்ந்த ஆடை ஆபரணங்களைத் துறந்து எளிய ஆடை உடுத்தி, வசிஷ்டர் வழி நடத்த, அயோத்தி மாநகரின் குடிமக்களும் விலங்குகளும் பின் தொடர "குப்தார் காட்" எனும் இடத்தில் ஸரயூ நதியில் இறங்கி தன் திருமேனியோடு வைகுந்தத்தை நோக்கிப் புறப்பட்டார். தான் மட்டும் போகாமல், அயோத்தியில் வாழ்ந்த மக்கள் அனைவரையும் – ஏன் – எறும்பையும் புல்லையும் கூட விட்டு விடாமல் அனைவரையும் தன்னோடு வைகுந்தம் அழைத்துப் போனார். முக்தி அளிக்கும் வல்லமை படைத்த ஜநார்தனன் தானே என்று தன் தெய்வத் தன்மையை வெளிப்படுத்தினார்.

வானளாவிய பேச்சால் தெய்வத்தைப் போன்றும், செயலால் மனிதனுக்கும் கீழாக நடப்பதையும் விட, பேச்சில் மனிதனாகவும் செயலில் தெய்வத் தன்மையோடும் இருத்தல் நலம்.

கருத்து : ஒரு ஜீவாத்மா பரமாத்மாவை அடைந்தால், அநந்தத்தில் பரமாத்மாவுக்கு சமமாகிறான். வைகுந்தத்தில் மட்டும் ஏற்படும் இந்நிலையே முக்தி எனப்படுகிறது.



வளரும்...

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 71

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | ■ | | | 2 | 3 |
| | | 4 | ■ | | 5 | | 6 | | | | |
| | | | 7 | | | | | | | 8 | |
| | | | | | | | ■ | | ■ | ■ | |
| | | | | | | | ■ | | ■ | | |
| | | | | | | 9 | 10 | | | | |
| | | | | 11 | | ■ | 12 | 13 | ■ | | ■ |
| | | | | | | | | 14 | ■ | | 15 |
| | 16 | | 17 | | | | | | | | |
| | | | | | | 18 | | ■ | ■ | | |
| 19 | | | | | | | | ■ | ■ | 20 | |
| 21 | | | | | | | | | | 22 | |

**இடமிருந்து வலம்**

1. பெருமாளுக்கு உப்பில்லாத பிரசாதம் நிவேதனம் செய்யப்படும் திவ்ய தேசத்தின் பழைய பெயர்......(7)
6. கோசலையின் மகன்.....(4)
10. வைகுண்ட ஏகாதசியில் ஆழ்வார்களும் எழுந்திருக்கும் தலம்....(5)
17. இராமாநுஜருக்கு திருக்கோட்டியூர் நம்பி சூட்டிய பெயர்.......(7)
19. அக்காரக்கனி எங்குள்ளான்....(7)
21. சப்த தான தலங்களில் ஒன்று....(8)

**வலமிருந்து இடம்**

2. இராமனை காட்டுக்கு அனுப்பியவர்....(3)
8. சப்த ரிஷிகளில் ஒருவர்....(4)
14. குலசேகராழ்வார் , ...(6) மீது அதிக பக்தி வைத்திருந்தார்.
18. ஆழ்வார்கள் பாடிய எட்டு நூல்களும் எட்டு.....(7) எனப்படும்.
22. சன்னியாசிக்கு முக்கியமானவைகளில் ஒன்று....(3)

தொகுப்பு :
திரு. எஸ். ராஜகுமார், சென்னை,
81249 30259

புதிருக்கு விடை அறிய
33ம் பக்கம்
பார்க்கவும்...

**மேலிருந்து கீழ்**

1. இராமாநுஜரின் தமர் உகந்த திருமேனி உள்ள இடம்.....(9)
3. நான்கு யுகங்களில் ஒன்று.....(6)
4. திருநீர்மலையில் இருந்த கோலத்தில் உள்ள பெருமாள்....(8)
5. மோட்சபுரிகளுள் ஒன்று.....(6)
7. நாராயணவனம் கோயிலைக் கட்டியவர்....(6)
11. காஞ்சிபுரம் வரதராஜரை வேண்டியதால் இராபர்ட் கிளைவிற்கு ...(6) நீங்கியது.
12. திருப்பதி கோவிந்த ராஜர் பெருமாள் கோயிலில் ஆழ்வார்களை நிறுவியவர்.......(6)
13. சப்த தீர்த்தங்களில் ஒன்று.....(5)
15. சப்தஸ்வர ஆஞ்சநேயர் உள்ள தலம்....(5)
16. பத்மாவதி தாயாரின் மற்றொரு பெயர்......(8)
20. வைகுண்டத்தில் பெருமாள் அருகில் இருக்கும் பேறு பெற்றவர்கள்.....(7)

**கீழிருந்து மேல்**

9. மதுரகவி ஆழ்வார் ....(6) மீது அதிக பக்தி வைத்திருந்தார்.

'உங்களுக்காக நாங்கள்'
உங்கள் ஆலோசனைகளுக்கு மற்றும் புகார்களுக்கு இலவசமாக தொடர்பு கொள்ளலாம்
டோல் ப்ரீ எண்கள்
1800-425-4141,
1800-425-333333

# நம்மாழ்வாரின் திருவாய்மொழிச் சிறப்பு

- ஸ்ரீ உ.வே.முனைவர் கோ.க.அ. ரங்கராஜன் ஸ்வாமி,
திருப்பதி, 9985599669

**முன்னுரை :**

திருமகள் நாதனான எம்பெருமான் தானே அடியனாகவும், ஆண்டானாகவும் (ஆசாரியன்) நின்று திருமந்திரத்தை வெளியிட்டருளினான். அவ்வெம்பெருமான் மிகவும் தாழ வந்து இப்படிப் பட்ட உணர்வைக் கொடுத்த போதிலும் ஜீவாத்மாக் களும் தான் தோன்றியாய் இருந்ததன் காரணமாக ஆழ்வார்களையும் ஆசாரியர்களையும் தோற்று வித்து உலகைத் திருத்தச் செய்தனன். அவ் வாழ்வார்களுக்கு மயர்வறச் செய்து நல்ல மதியையும் அருளினன். அப்படிப்பட்ட ஆழ்வார் களில் “அவயவி” எனப் போற்றப்படும் நம்மாழ்வார் முதன்மையாக விளங்குகிறார். மற்றைய ஆழ்வார்கள் அங்கியாக விளங்குகிறார்கள். இவர் இயற்றிய திவ்வியப் பிரபந்தங்கள் திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி, பெரிய திருவந் தாதி என நான்காகும். ருக், யஜுர், சாம, அதர்வணம் என்று நான்கு வேதங்களின் சாரங்கள் ஆகும். அவற்றில் திருவாய்மொழி சாமவேத சாரம் என்று ஸ்ரீமந்நாதமுனிகள் திருவாய்மொழிக்கமைந்த தனியனில் (சிறப்புப் பாயிரம்) குறிப்பிடுகிறார்.

*“பக்தாம்ருதம் விஸ்வஜநாநுமோதநம்*
*ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோபவாங்மயம்,*
*ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸ மாகமம்*
*நமாம்யஹம் த்ராவிட வேதஸாகரம்”*



என்பது ஆகும். நம்மாழ்வாரின் திருவாய் மொழிச் சிறப்பைக் கூறுங்கால் திருவாய்மொழியின் அமைப்பு, வளர்ச்சி, நிறைவு, திருவாய்மொழியின் பெயர்க்காரணம், திருவாய்மொழித் தொடர் விளக் கம், திருவாய் மொழிக்கமைந்த உரைகள், அகப் பொருட்கள் விளக்கம், ஆழ்வாரின் திருவுள்ளக் கிடக்கை, ஆழ்வார் – இறைவன் உரையாடல்கள், இலக்கணக் கூறுகள், திருவாய்மொழியின் சிறப்பு ஆகியவை இக்கட்டுரையில் இடம் பெறுகின்றன.

**திருவாய்மொழியின் சிறப்பு :**

நம்மாழ்வார் *“பண்ணார் பாடலின் கவிகள்”* (10.7.5) என்றும், *“பாலேய் தமிழரிசைகாரர் பக்தர் பவு மாயிரத்தின்”* (1.5.11) என்றும் தமக்கு முன்னோர் களான முதலாழ்வார்களைக் குறிப்பிடுகிறார். கடலையும் சடகோபரான நம்மாழ்வாரின் சொல்லை யும் சமமாகச் சொல்லப்படுகின்ற அதாவது ஸ்ரீராமாயணம் எந்த அமைப்பில் அமைந்துள்ளதோ அதைக் காட்டி ஆழ்வாரின் திருவாய்மொழியையும் ஒப்புமைக் காட்டித் திருவாய்மொழியின் ஏற்றத்தைக் கூறுகிறார். ஸ்ரீராமாயணம் இருபத்து நாலாயிரம் சுலோகங்களாய், ஐநூறு அத்தியாயங்களாய் (ஸர்க்கங்கள்), ஆறு காண்டங்களாய் என்றும் கடலாய் இருக்கும். ரகு வம்ச சரித்திரமாய், வால்மீகி முனிவன் பணித்த சொல்லாய், பெரும்பாவங்களை நசிக்கும்படியாய் இவ்வுலக(ஸம்ஸார)த்தை விட்டு நீங்கி நிலையான விஷ்ணுவின் திருப்பாதங்களை அடைவிக்கும். திருவாய்மொழி சீர்த் தொடையாயிர மாய், தீர்த்தங்களாய் (தூய்மையாய்), பத்து நூறு என்னும் படியாய், வேதத்தின் ஆறு அங்கங்களான சிக்ஷா, வியாகரணம், நிருக்தம், சந்தஸ், கல்பம்,

ஜோதிஷம் என்பவைகளின் ஆறு மறு மொழிகளாய், பத்துப்பத்தாயிருக்கும்; திராவிட வேத ஸாகரமென்று சொல்லும்படியான தமிழ் வேதக் கடலாயிருக்கும். ***''முகில் வண்ணனடிமேல் சொன்ன சொல் மாலை யாயிரம்''*** (7.2.11) என்று கண்ணபிரான் சரித்திரமாய், குருகூர்ச்சடகோபன் சொல்லாய்த் தீராத வினையைப் பொடி செய்து ***''வானில் மீதேற்றியருள் செய்து முடிக்கும் பிறவி மாமாயக் கூத்தினையே''*** (8.4.11) என்கிறபடியே வைகுந்தத்தை அடைவித்துத் திருமால் திருவடியை அடைவிக்கும்.

## திருவாய்மொழியின் வளர்ச்சி - நிறைவு

சடகோபரின் சீடரான ஸ்ரீமந்நாதமுனிகள் அவதரிக்கவில்லையேல் நமக்குத் திருவாய்மொழியும் கிட்டியிராது; நாலாயிரத்திவ்வியப் பிரபந்தமே கிடைத்தற்கு வாய்ப்பில்லாது போயிருக்கும். பன்னிரண்டாயிரம் முறை உரு (திருப்பித் திருப்பிச் சொல்லுதல்) செய்து நம்மாழ்வாரின் திவ்விய கடாக்ஷத்துக்கு (திருவருளுக்கு) இலக்காகி ஆழ்வார் போதித்தத் திருவாய்மொழியையும், நாலாயிரத்தின் வரை முறையையும் நம்மாழ்வாரின் திருவாக்காலே பெற்றார்.

பின்னர் இராமாநுஜர் அவதரித்தபின் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் மறுமலர்ச்சி அடைந்தது எனலாம். திருவாய்மொழிக்கமைந்த தனியனில் நம்மாழ்வாரைத் திருவாய்மொழியின் ஈன்ற தாயாகவும் இராமாநுஜரை இதத்தாயாக (வளர்த்த தாயாகவும்) ஸ்ரீபராசர பட்டர் தெரிவிக்கிறார்.

***வான்திகழும்சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்***
***ஆன்றதமிழ் மறைகளாயிரமும் - ஈன்ற***
***முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த***
***இதத்தாய் இராமாநுசன்***

என்பதே அந்தத்தனியனாகும். எதிராசர் பேரருளால் திருவாய்மொழிக்குப் பேருரைகளும் வெளி வந்தன. இவ்வாறாக ஆழ்வாரின் திருவாய்மொழி வளர்ச்சி பெற்று நிறைவையும் அடைந்தது.


## திருவாய்மொழியின் பெயர்க்காரணம்


ஆழ்வார்கள் அருளிய பாக்கள் அனைத்தும் தத்துவ அறிவை அளிப்பவையாய் அமைந்து உள்ளன. மேலும், மேலான திருநாராயணனின் இயல்பு, குணம், வடிவு, திருவிளையாடல்கள், செல்வங்கள் ஆகியவற்றைப் பரக்க இன்னிசைப் பாக்களில் அமைந்துள்ளதாலும், தெய்வத் தன்மை வாய்ந்துள்ளதாலும் அவை திவ்வியப் பிரபந்தமென வழங்கப் படுகின்றன.

அந்தத் திவ்வியப் பிரபந்தங்கள் மேன்மையுடைய வாயினால் சொல்லும் சொற்களினால் ஆகிய நூல் என்பதால் திருவாய்மொழி என்று அழைக்கப் படுகின்றது. திருவாய்மொழிக்குண்டான சிறப்புத் தோன்றத் திருநாவீறுடையபிரான் என்று பெயர் விளங்குகையாலே ஆழ்வாருடைய மேன்மையும் உணரப்படுகின்றது. இப்படிப்பட்ட காரணங்களால் திருவாய்மொழி எனப் பெயர் வந்தது என்பர். திருமங்கையாழ்வார் அருளிய திருமொழியினின்றும் வேறுபாடு காண்பதற்காகவே திருவாய்மொழி எனப்பட்டது போலும்! வாய்மை தங்கிய மொழி எனபாருமுளர்.

## திருவாய்மொழியின் தொடர் விளக்கம்

திருவாய்மொழி நூறு பதிகங்களாக அமைந்து ஆயிரத்து நூற்றிரண்டு பாக்களைக் கொண்டது. பத்துப்பத்தாக அமைந்துள்ளது. இப்பிரபந்தம் முழுவதும் அந்தாதித் தொடையில் பாடப்பட்டது. சொல் தொடை அந்தாதி, பொருள் தொடர்நிலை





# பக்தன் யார்?

ஒரு மஹாஞானியிடம் ஒரு சீடன், உண்மையான பக்தன் யார் என்று கேட்டான். அதற்கு அவர் பின்வருமாறு கூறினார். எவனது சித்தம் முற்றிலும் அமைதியாய் உள்ளதோ, எவன் எல்லோரிடமும் மிருதுவாகவும், இனிமையாகவும் நடந்து கொள்கிறானோ, எவன் தனது ஐம்புலன்களையும் வென்று விட்டானோ, மனம், உடம்பு, பேச்சு ஆகியவற்றால் எவரிடமும் பகை இல்லாமல் எவன் இருக்கிறானோ, எவனது மனம் கருணையால் உருகி ஓடுகிறதோ, எவன் திருட்டு, வன்முறை ஆகியவற்றிலிருந்து முழுமை யாய் விலகி விட்டானோ, நற்குணங்களை நாடி, பிறரது நன்மைக்கு உதவும் செயல்களில் எவன் ஈடுபடுகிறானோ, எவரது வாழ்க்கை நல்ல காரியங்களையே செய்து தூய்மையுடன் உள்ளதோ, எவன் பிறரது மகிழ்வைக் கண்டு தானும் மகிழ்கிறானோ, எல்லா உயிர்களிடமும் இறைவன் இருக்கின்றான் என்பதால், எவன் யாரிடமும் பொறாமை, பகை இல்லாமல் நடந்து கொள்கிறானோ, ஏழை, எளியோர்க்கு இரங்கும் குணம் எவனுக்கு இயல்பாகி விட்டதோ, எவனொருவன் பிறருக்கு உதவுவதையே கருத்தாய்க் கொண்டுள்ளானோ, எவனொருவன் பிறரது நல்ல குணங்களைக் கண்டு சந்தோஷம் அடைகின்றானோ, எவன் பிறரது குறைகளைப் பெரிது படுத்தாமல் உள்ளானோ, எவன் தன் இதயத்தை இறைவனிடம் செலுத்தி இனிய மொழியையே பேசுகின்றானோ அவனே பக்தன்.

– தொகுப்பு : திரு. எஸ். திருமலை, கோவை.

அந்தாதி என்ற இரண்டினுள் சொல் தொடை நிலை யாகும். *''செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே''* என்பது தண்டியலங்காரம்.

இந்தத் திவ்வியப் பிரபந்தத்தின் பாசுரங்கள் பொருளில் ஒன்றையொன்று தொடர்ந்து நிற்பது தோன்ற அறிவிற்சிறந்த ஆசிரியர்கள் வியாக்கி யானம் அருள்வதனால் இவை "பொருள் தொடர் நிலையுமாம்'', "பொருளினுஞ் சொல்லினுமிரு வகைத் தொடர்நிலை" என்றும் தண்டியலங்காரச் சூத்திரத்தின் உரையில் "இரண்டொன்னாது வகை யென்ற மிகையான் மூன்றாவது பொருளினுந் தொடர்தலுமுண்டெனக் கொள்க" என்றது.

நெடுக ஒரு கதையாகக் கூறுதலல்லாமல் தோத் திர ரூபமாக அருளிச் செய்யப்பட்ட பாசுரங்களா தலால் சொற்றொடர் நிலையாகவே கொள்ளலாம் என்பது ஒருசாரார் கொள்கை.

தொல்காப்பிய செய்யுளில் கூறப்பட்ட அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், கிழைவு என்ற எண்வகை வனப்பினுள் இப்பிரபந்தம் "விருந்து" என்னும் வனப்பின் பாற்படும்.

"விருந்து தானும் புகுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்ற தொல்காப்பியச் சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் "விருந்து தானும் பழங்கதை

மேலதன்றிப் புதிதாகத் தாம் வேண்டியவற்றால் பல செய்யுளுந்தொடர்ந்து வரத்தொடுத்துச் செய்யப் படும் தொடர்நிலை மேலது” என்கிறார்.

## திருவாய்மொழிக்கு எழுந்த உரைகள்


நாதமுனிகள் காலத்திலும், அதற்குப்பின் ஆசாரியர்கள் காலத்திலும் திருவாய்மொழி இலக்கி யங்களாக ஆழ்வார்களின் அனுபவங்களைப் போற்றிப் பேசி வந்தனர். ஆழ்வார்கள் காலத்துப் பாடல்கள் நாதமுனிகள், ஆளவந்தார் காலங்களில் அரும்பாகவும், போதாகவும் இருந்து இராமாநுஜர் தோன்றிய பின்னரே மலராக மலர்ந்தன.

ஆளவந்தாரின் திருவுள்ளப் பாங்கை அறிந்த இராமாநுஜர் தம்முடைய ஞானப் பிள்ளையான திருக்குருகைப்பிரான் பிள்ளான் வாயிலாக வட சொல் மிகுத்தும், தமிழ்ச்சொல் குறைத்தும் ஆழ்வா ரின் திருவுள்ளக் கருத்தைத் தெரிவிக்குமாறு உரையை அமைக்கச் செய்தார். அதுவே ஆறாயிரப் படியாய் ஸ்ரீவிஷ்ணுபுராண எண்ணிக்கையில் அமைந்துள்ளது.

நஞ்சீயர் என்னும் வேதாந்தியால், பட்டர் என்னும் ஆசாரியரின் திருவருளால் ஒன்பதினாயிரப்படி என்னும் உரை ஸ்ரீபாஷ்ய எண்ணிக்கையில் அமைந்து உள்ளது. நம்பிள்ளையின் அருளுக்கு இலக்கான பெரிய வாச்சான்பிள்ளை என்னும் ஆசாரியர் பெருகி வரும் ஆற்று நீரைப் போல இதிகாசங்களுள் மிக உயர்ந்த தான இராமாயணச் சுலோக எண் ணிக்கைக்குச் சேர இருபத்து நாலாயிரப்படி என்னும் உரையை இயற்றினார்.

அடுத்ததாக நம்பிள்ளையின் உபதேச நெறி யினை உலகுக்கு உணரச் செய்த வடக்குத் திருவீதிப் பிள்ளை “ஈடு” என்னும் முப்பத்தாராயிரப்படியை அதாவது சுருதப் பிரகாசிகை என்னும் நூலுக்குச் சமமான ஒருரையை அமைத்தார். பெரியவாச்சான் பிள்ளையின் மாணாக்கரான வாதிகேசரி அழகிய மணவாளச்சீயர் தம்முடைய பேரறிவாற்றளால் திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி என்னும் உரையை உலகுக்கு அளித்தார்.

தொடரும்...



## கண்ணன் கருத்துரை

*ந கர்த்ருத்வம் ந கர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு: ।*
*த கர்மபலஸம்யோகம் ஸ்வபாவஸ்து ப்ரவர்த்ததே ।।*

(5-14)

**பகவான் உயிர்களுக்கு வினை செய்யும் உரிமையையோ, வினை செய்வதையோ, வினைப்பயனை அடைதலையோ உண்டாக்கவில்லை. அவரவர் இயற்கைக்கு ஏற்ப, முன் வினைக்கு ஏற்ப இவை முறையாக உண்டாகின்றன.**

தொகுப்பு :
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.





# வக்கிரமான கிரகங்கள் கொடுக்கும் பலன்கள்

முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
சென்னை,
9444392595

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

- மிதுன ராசியில் வக்கிரமான சுக்கிரன் தாயாருடன் கசப்பான உறவை உண்டாக்குகிறார் மற்றும் மணவாழ்வில் விரிசலை உண்டாக்குகிறார்.
- ரிஷப ராசியில் வக்கிரமான செவ்வாய், ஜாதகருக்கு உடல்நிலை, பொருளாதார குறைவையும் ஏற்படுத்துகிறார்.
- கடக ராசியில் வக்கிரமான புதன் வாழ்க்கையில் ஏமாற்றங்களையும் பின்னடைவையும் ஏற்படுத்துகிறார்.
- கன்னி ராசியில் வக்கிரமான புதன் கல்வியில் தடங்கல்களையும், தாய் வழி உறவினர்களுக்கு முன்னேற்றமின்மையும் ஏற்படுத்துகிறார்.
- கடக ராசியில் வக்கிரமான குரு கல்வியில் தடையும், பால்ய வயதில் முன்னுக்கு வரவிடாமல் கஷ்டங்களையும் ஏற்படுத்துகிறார்.
- கன்னி ராசியில் வக்கிரமான குரு, தந்தை வழி உறவினருடன் மனக்கசப்பு, சச்சரவு, மனவருத்தங்களை ஏற்படுத்துகிறார்.
- கடக ராசியில் வக்கிரமான சுக்கிரன், மண வாழ்க்கையில் அதிருப்தியை ஏற்படுத்துகிறார்.
- சிம்ம ராசியில் வக்கிரமான சுக்கிரன், ஆண்மைக் குறைவை, பால்ய வயதில் தந்தை இழப்பு அல்லது பிரிவை ஏற்படுத்துகிறார்.
- கடக ராசியில் வக்கிரமான சனி, கூடாத மண வாழ்வுகளை ஏற்படுத்துகிறார்.
- துலா ராசியில் வக்கிரமான சனி, மண வாழ்க்கையில் ஏமாற்றங்களையும், மன வருத்தங்களையும் ஏற்படுத்துகிறார்.
- மிதுன ராசியில் வக்கிரமான செவ்வாய், வாழ்க்கையில் புகழையும், பெருமையையும் கெடுக்கின்றார். சண்டை சச்சரவுகளை ஏற்படுத்தி காது, மூக்கு, தொண்டை சம்பந்தமான அறுவை சிகிச்சை செய்ய வைக்கிறார்.
- கடக ராசியில் வக்கிரமான செவ்வாய், சிறு வயதில் பெற்றோர்களை பிரியும், அல்லது முறையாக வளர்க்கப்படாத சூழலை ஏற்படுத்துகிறார்.
- சூன்ய ராசியிலோ, சூன்ய கிரகங்களுடன் சேர்ந்து வக்கிர கிரகங்கள் அபரிதமான பாவ பலன்களைக் கொடுக்கும்.
- கன்னி ராசியில் வக்கிரமான செவ்வாய், அப்ரெண்டிஸ் என்கிற குடல்வால் நோயைக் கொடுத்து அறுவைசிகிச்சை அல்லது வயிற்றில் ரணங்களை ஏற்படுத்துவார்.
- மீன ராசியில் வக்கிரமான புதன், உடன்பிறந்த சகோதர–சகோதரிகளால் ஜாதகருக்கு மனவருத்தங்களையும், கஷ்டங்களையும் ஏற்படுத்துவார்.
- விருச்சிக ராசியில் வக்கிரமான செவ்வாய், ஜாதகரை ஆன்மீக வாழ்வுக்கு வழி காட்டுகிறார்,

ஜாதகர் குரு பார்வை பெற்றிருப்பின் புகழ் எய்துகிறார்.

- கும்ப ராசியில் வக்கிரமான குரு, நோய்களை உண்டாக்கி மருத்துவமனை வாசம் செய்ய வைக்கின்றார்.
- கும்ப ராசியில் வக்கிரமான குரு, மணவாழ்க்கையில் வெறுப்பை ஏற்படுத்தி ஆன்மீக வாழ்வில் தெளிவான ஞானத்தை உண்டாக்குகிறார்.
- கன்னி ராசியில் நீச வக்கிரமான சுக்கிரன், ஜாதகருக்கு முறையற்ற தாம்பத்ய வாழ்கைக்கு வழி கோலுகிறார்.
- கன்னி ராசியில் நீச வக்கிரமான சுக்கிரன், ஜாதகருக்கு சிறுநீரகக் கோளாறுகளை ஏற்படுத் துவார்.
- சனியின் வீடுகளான மகர, கும்ப ராசியில் வக்கிரமான சுக்கிரன், ஜாதகருக்கு தாம்பத்ய வாழ்க்கையில் வெறுப்பையும், பிரிவையும் ஏற்படுத்துகின்றார்.
- விருச்சிக ராசியில் வக்கிரமான சனி பகவான், ஜாதகருக்கு தத்துவ வாழ்க்கையில் ஞானத்தை உண்டாக்கி தத்துவங்களை பிறருக்கு உபதேசிக்க வைக்கின்றார்.
- வக்கிர குரு எட்டில் இருந்து அதுவும் ஸ்திர ராசியாக இருந்தால் ஜாதகர் பட்டம் பெற்று ஆராய்ச்சியில் ஈடுபடுவார். கண்டுபிடிப்புகளும் உண்டு.
- மீன ராசியில் வக்கிரமான சனி, ஏராளமான லாபங்களை ஜாதகருக்கு கொடுத்து கடைசியில் அதை பிடுங்கி விடுகின்றார்.
- வக்கிர சனி, ஜாதகரைக் கடின மனமுடையவராகவும், பிடிவாத குணமுடையவராகவும், பயனற்ற காரியங்களைச் செய்யக் கூடியவராகவும், பணம் சம்பாதிக்கும் பேராசை உடையவராகவும், மத தத்துவங்களைப் பிரச்சாரம் செய்ய தயங்காத வரும் ஆவார், அதேசமயம் அந்த


## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# சிறார் வாக்கு

*குழந்தைகளே ... நீங்கள் எழுதுங்கள் ! பெரியோர்களே ... நீங்கள் ஊக்குவியுங்கள் !!*

**சிறுவர் சிறுமிகளிடையே நம்முடைய பண்பாட்டின் மீதும், தர்மத்தின் மீதும், புராணத்தின் மீதும், பகவானின் மீதும், பெரியோர்களின் மீதும் ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கும், ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதற்கும் சிறார் வாக்கு எனும் தொடர் பிரதி மாதம் ஸப்தகிரி இதழில் மலர்கிறது.**

***யாரெல்லாம் எழுதலாம்? என்ன எழுத வேண்டும்?***

பத்தாம் வகுப்பு அல்லது அதைவிடக் குறைந்த வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவரும் எழுதலாம். நீங்கள் படித்த கதைகள், நீங்கள் கேட்ட தர்ம நீதிக்கதைகள், ஹரிகதைகள், புராணங்கள், இதிஹாசங்கள், நீதிசதகங்கள் முதலானவற்றில் உள்ள ஆன்மீகக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் கதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ அல்லது பகவான் மீது உங்களுக்கு எழும் சிந்தனையினையோ எழுதலாம்.

***பெரியோர்கள் செய்ய வேண்டியன...***

குழந்தைகளிடம் நம்முடைய புராண, இதிஹாஸங்கள் மீது நல்அறிவினை வளர்ப்பதற்கு அவர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கி, சிறிய சிறிய ஆன்மீக நூல்களை படிக்குமாறு அவர்களை ஊக்குவித்து எழுத வையுங்கள்.

***நிபந்தனைகள் :***

**படைப்பு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். முழு விலாசம், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், படைப்பு உங்கள் சொந்தமானது என்னும் உறுதிப்பத்திரத்தில் நீங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியர் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். நீங்கள் படைப்பினை அனுப்பின பிறகு இறுதி முடிவு பிரதான ஆசிரியருடையதே. படைப்பின் மீது எத்தகைய கடிதப் போக்குவரத்துக்கும் இடமில்லை.**

*படைப்பினை அனுப்ப வேண்டிய முகவரி :*

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், கே.டி. சாலை, தி.தி. தேவஸ்தானம், திருப்பதி-517 507.



குழந்தைகளே எழுதுங்கள்!
கோவிந்தன் திருவருளை
பெறுங்கள்!!



## திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம்

திருச்சானூரில்
10-6-2022 வெள்ளிக்கிழமையன்று
ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமிக்கும்
11-6-2022 சனிக்கிழமையன்று
ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமிக்கும்
12-6-2022
ஞாயிறு முதல்
14-6-2022 செவ்வாய் வரை
ஸ்ரீபத்மாவதி தாயாருக்கும்
தெப்போத்ஸவம் நடைபெறும்.



தத்துவங்களை வாழ்க்கையில் கடைபிடிக்காத வராகவும் இருப்பார். இந்த நிலை , சனி 3, 6, 11 ஆகிய இடங்களைத் தவிர்த்து மற்ற இடங்களில் இருக்கும் போது மட்டும் ஏற்படுகிறது.

### சுபகிரகம் வக்கிரம் அடைந்தால் என்ன பலன்?

சுபகிரகம் வக்கிரம் அடைந்தால் அமரும் இடத் திற்கு ஏற்றார்போல் நன்மையோ தீமையோ வாரி வழங்கும். அந்த கிரகம் எந்த பாவத்திற்கு அதிபதியாக வருகிறதோ அதற்கு ஏற்றார்போல நன்மை தீமை பலனைத்தரும்.

### அசுப கிரகம் வக்கிரம் அடைந்தால் என்ன பலன்?

ஜாதகர் மனதளவில் பாதிக்கப்படுவது, தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாவது, முரண்பட்ட வாழ்க்கை முறையை மேற்கொள்வது, எதையும் தாங்கும் மனநிலை, திருமண வாழ்க்கையில் திருப்தியின்மை, தொழில் சரியாக அமையாத நிலை, போராட்டமான வாழ்க்கை போன்ற பலன்கள் சுய ஜாதகத்துக்கு உட்பட்டு நடக்கும்.

மேலும், சரியான பலன்களைத் தெரிந்துக் கொள்ள சுய ஜாதகத்தை வைத்து சொல்வதே சரியாக இருக்கும்.

உபஜெய ஸ்தானங்களைத் தவிர மற்ற இடங்களில் செவ்வாய் வக்கிர நிலையை அடையும் போது, ஜாதகரை மிகவும் கோபமுடையவராக்கி தவறான புத்தியை அளித்து, தனது கஷ்டங்களைத் தீர்க்க எதிர்மறையான வழிகளில் செல்ல வைக்கிறது.

இவர்கள் எப்போதும் உண்மையையும், நேர்மையையும் கண்டு அஞ்சக் கூடியவர்களாக இருப்பர். எனவே இவர்கள் தனது நண்பர்களையும் உறவினர்களையும் கோபித்துக் கொண்டு வசைபாட ஆரம்பிப்பார்கள்.

இவர்கள் தூக்கத்தில் அச்சம் தரக்கூடிய, மாறாத கனவுகளைக் காண்பார்கள். இவர்கள் தங்கள் நிலையை பிறரிடம் நிரூபிக்கும் முன் தங்களது குறை களையும் தவறுகளையும் வெளியிட வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாவர்.

புதன் ஜாதகத்தில் வக்கிரமடைந்தவர்களில் வேறு வகையினரும் இருக்கிறார்கள். அவர்கள் வித்தியாசமாக சிந்திக்கக் கூடியவர்களாக இருப்பர். நல்ல சிந்தனைகள் மனதில் தோன்றும்.

ஆனால், அதை சரியான முறையில் எப்படி வெளியிடுவது என்பது தெரியாது.

இடம், பொருள், ஏவல் அறிந்து பேச வேண்டும் என்ற எண்ணம் தோன்றாது. அல்லது அப்படி பேசத் தெரியாது. தன்னை அதிபுத்திசாலி என்று நினைத்துக் கொள்வார்கள்.

தன் பேச்சாலேயே தனக்குத் தானே வீண் பிரச்சனைகளைத் தேடிக் கொள்பவர்களாக இருப்பார்கள்.

தொடரும்...



# தூய்மையான பசுமையான திருமலை

தொகுப்பு : திரு. அத்தி ரங்கராஜன், திருப்பதி, 98490 99246.

பழம் பெரும் சேஷாசலம் ஒரு பசுமை நிறைந்த, அழகு மிகுந்த, மனிதனின் பாதம்படாத இயற்கை வளம்மிக்க மலைத்தொடராகும். இங்கு மட்டுமே காணப்படும் அரிதான விலங்குகளுக்கும், அபூர்வமான தாவரங்களுக்கும் இது இருப்பிடமாகும். இதனாலேயே இந்திய அரசாங்கம் இந்த மலைத்தொடரை "உயிர்க்கோள காப்பகம்" (பையோஸ்பியர் ரிசர்வ்) என அறிவித்திருந்தனர். இதன் பசுமையை, இயற்கை வளத்தை காக்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு.

இந்த சேஷாசலத்தில் உள்ள திருமலைப் பகுதி திருவேங்கடமுடையானின் திருத்தலமாக பிரபலமானபின் பக்தர்கள் கூட்டம் கடந்த நூற்றாண்டு காலத்தில் அதிகரிக்கத் தொடங்கியது. மனித போக்குவரத்து வெகுவாக உயர உயர, இதன் பசுமையையும் தூய்மையையும் பாதுகாப்பது சிரமத்துடன் கூடிய விஷயமாக மாறத்தொடங்கியது. அப்பொழுதுதான் தூய்மையைக் குறிக்கோளாகக் கொண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினர் சில புரட்சிகர முடிவுகள் எடுக்கத் தொடங்கினர்.

மாசுபாடு என்பது இன்று உலகையே உலுக்கி எடுக்கும் ஒரு பெரிய பிரச்சனை. அதிலும் ஒரு தடவை உபயோகித்து வீசியெறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் அதாவது பைகள், டம்ளர்கள், கோப்பைகள் போன்றவை அகற்ற முடியாத அளவுக்கு உலகத்தையே மாசுபடுத்தி உள்ளது. அக்காலத்தில் தேவஸ்தானத்தினரும் பிரசாதங்களை எடுத்துச் செல்ல பக்தர்களுக்கு பிளாஸ்டிக்கால் ஆன பைகளையே வழங்கியிருந்தனர். அவர்கள் எடுத்துச் செல்வது போக, மற்றவற்றை மக்கள் அங்கேயே துறக்க ஆரம்பித்ததும், அவை திருமலையையே மாசுபடுத்தத் தொடங்கின. நிலைமையை வெகுவாக பரிசீலித்து புரிந்து கொண்ட தேவஸ்தான அதிகாரிகள் பிளாஸ்டிக்காலான பைகளுக்கு தடை விதித்தனர்.

பிளாஸ்டிக் பொருட்களுக்கு பொறுப்புடன் செலவழிக்கக் கூடியது என்ற பெயர் இருந்தாலும், அதனை கையாளும் முறை, அவற்றை பயன்படுத்தும் மக்கள் கையில் தான் உள்ளது. பொறுப்புடன் செயல்படுத்தும் மக்கள் இல்லையென்றால் அவை மண்ணோடு கலக்க பல நூற்றாண்டுகள் ஆகும். இதனாலேயே இது பூமிக்குள் புகுந்து பயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கின்றன. ஆழ்கடலுக்குள் சென்று அங்கு வாழும் உயிரினங்களுக்கும், தீமை உண்டாக்குகின்றன. ஆயிரம் டன்கள் எடை கொண்ட



இந்த பிளாஸ்டிக் பைகள் ஒரு போர்வையைப் போல் பூமியின் மேல் போர்த்தப்பட்டு, நீரை இறங்க விடாமல் தடுக்கின்றது. தாவரங்களை தவிக்க வைக்கின்றது. அதனை உண்ணும் அப்பாவி விலங்குகளுக்கு மரணத்தை அறிமுகப்படுத்து கின்றது.

திருமலையில் இவற்றைப் போன்ற நிகழ்வு களைத் தவிர்க்கவே தேவஸ்தானத்தினர் பிளாஸ்டிக் கிற்கு மாற்று பொருட்களை அறிமுகப்படுத்தினர். சணல், துணி போன்ற இயற்கையோடு ஒன்றக் கூடிய பொருட்களிலிருந்து பைகள் தயாரித்து பக்தர்களுக்கு வழங்குகின்றனர். திருமலையில் லட்டு வழங்கும் இடத்திலேயே இந்தப் பைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. துணிப்பைகள் இரண்டு அளவுகளில் கிடைப்பதால் பக்தர்கள் அவரவர் தேவைக்கேற்ப சிறிய அல்லது பெரிய பைகளை வாங்கிக் கொள்ளலாம். இந்த பைகளின் உட்புறம் வெண்ணை காகிதம் வைத்து தைக்கப் பட்டுள்ளதால் அந்தப்பை நெய்யை உறியாது, கறை படியாது. பலநாட்கள் உபயோகிக்கும் வாய்ப்பு உண்டு. அதேபோல், காய்கறி தோலிலிருந்து செய்யப்பட்ட பைகளும், சணல் பைகளும் கூட இங்கு விற்கப்படுகின்றன. கொஞ்சம் விலை உயர்ந்த இந்தப் பைகளை வாங்கி, மாற்று உபயோகம் செய்வோரும் உண்டு.

எந்தப் பையானாலும், பக்தர்கள் ஊருக்குச் சென்ற பின்னரும் திரும்ப உபயோகிக்கும் தன்மை கொண்டவை. பிளாஸ்டிக் பையானால் வீட்டுக்குச் சென்றவுடன் தூக்கியெறியும் மக்களும் இந்த பைகளை பத்திரமாக பக்தியோடு பாதுகாத்து வைப்பர் அல்லது மாற்று உபயோகம் செய்வர். தேவஸ்தானத்தினரின் இந்த மேன்மையான முடிவு திருமலையைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் எல்லா ஊர்களிலும் பிளாஸ்டிக் உபயோகத்தை குறைக்க உதவுகிறது. அவ்வளவு ஏன், இந்த உலகத்திலேயே பிளாஸ்டிக் பொருட்களின் விநியோகம் குறையவும் வாய்ப்பினை அதிகரிக்கிறது. ஏழுமலையானின் சன்னிதானத்தில் எடுக்கப்படும் முடிவு பாரெங்கும் பாராட்டப்படும், போற்றப்படும், அங்கீகரிக்கப்படும், அமலாக்கப்படும் அல்லவா!"

பைகளுக்குப் பிறகு உலகத்தை அதிக மாசு படுத்துவது பிளாஸ்டிக் பாட்டில்கள். ஒரு மதிப் பீட்டின்படி திருமலைக்கு ஒவ்வொரு நாளும் 40000 பிளாஸ்டிக் பாட்டில்கள் வந்து இறங்குகின்றன. மறுபயன்பாட்டிற்கு சில பாட்டில்கள் சென்றாலும், மலையின் மேலேயே விட்டுவிடப்படும் பாட்டில்கள் தான் நாள் ஒன்றுக்கு எத்தனை எத்தனை ஆயிரம்?

தேவஸ்தானத்தினர் பக்தர்களுக்காக "ஜல பிரசாதம்" என்ற பெயரில் சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குகின்றனர். திருமலையில் நீர் ஆலைகள் நிறுவி அவற்றின் மூலமாக வெவ்வேறு இடங்களில் குடிநீர் இலவசமாக வழங்கும் கருவிகள் அமைக்கப் பட்டுள்ளன. தண்ணீருக்காக பக்தர்கள் ஒரு ரூபாய் கூட செலவழிக்க வேண்டிய அவசியம் வரக்கூடாது என்ற குறிக்கோளுடன் இந்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. அதேபோல், கடைகளில் பிரசாதத்தை நிரப்பி, தாங்கள் திருமலையில் இருக்கும் நாட்கள்






வரை பக்தர்கள் உபயோகித்துக் கொள்ளலாம். திரும்பச் செல்லும் போது அந்த கண்ணாடி பாட்டிலை திருப்பி கொடுத்து விட்டு அதன் விலையை திரும்பப் பெறலாம். இந்த ஏற்பாடுகளை செய்தபின் திருமலையில் பிளாஸ்டிக் பாட்டில்கள் கொண்டு செல்வதிலும் தடை விதிக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் 40000 பாட்டில்களால் மாசுபட்டி ருந்த திருமலை இன்று பசுமையின் சின்னமாக பூத்துக்குலுங்குகிறது. பக்தர்களுக்காக மட்டும் அல்ல. இந்த தடை தேவஸ்தானத்தினர் தங்களுக்கும் விதித்துக் கொண்டனர். தங்கள் அதிகாரிகள் தினமும் பங்கேற்கும் மேடைகள், விழாக்கள் போன்றவற்றில் கூட கண்ணாடி பாட்டில்களில் ஜல பிரசாதம் மட்டுமே உபயோகிக்கின்றனர். ஸ்வாமி தரிசனத்திற்காக வரும் மேதகு விருந்தாளிகளுக்கும் இவற்றையே உபயோகிக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. இந்த புரட்சிகர முடிவை எல்லோரும் வரவேற்கின்றனர்.

திருமலையில் நாளொன்றுக்கு பல ஆயிரம் பக்தர்களுக்கு உணவு அளிக்கப்படுகிறது. எவ்வளவு கவனமுடன் கணக்கெடுத்தாலும் கொஞ்சம் உணவுப் பொருட்கள் மிகுந்து தான் போகிறது. ஆனால், அவற்றையும் இங்கு பொறுப்புடன் கையாள்கின்றனர். நறுக்கிய காய்கறி தோல், மிகுதியான உணவு, அடுக்களை கழிவுப் பொருட்கள், இவற்றை எல்லாம் "ஈரமான கழிவு" என்ற பெயரில் நிர்வகிக்கின்றனர். திருமலையைச் சுற்றி அடர்ந்த காட்டுப்பகுதி இருப்பதனால், உணவுக் கழிவுகளை பொறுப்புடன் அகற்றாவிடில் விலங்குகளை ஊருக்குள் ஈர்க்கும் அபாயம் உள்ளதால், இதை செவ்வனே செய்கின்றனர்.

மலைக்கு செல்லும் மற்றும் இறங்கும் சாலைகளில் துப்புரவு மேம்பாடு ஓர் அதிசயம். தரிசனத்திற்குப் பிறகு ஊருக்கு திரும்பிச் செல் லும் பக்தர்கள் பிளாஸ்டிக் பாட்டில்களையும், உணவுப் பொருட்களை யும் சாலைகளில் வீசியெறிவதால், பின்னால் வரும் வாகனங்களுக்கு அபாயம் விளைவிப்பது மட்டு மல்லாமல், வன விலங்குகளுக் கும் அழைப்பு விடுப்பது போலா கும். தேவஸ்தானத்தின் துப்புரவு துறையினர் சாலைகளை நன்றாக பராமரிக்கின்றார்கள். இப்பொ ழுது மனிதர்களால் தூய்மைப் படுத்தப்படும் பணி விரைவில் மேன்மையான செயல்திறன் கொண்ட இயந்திரங்களைக் கொண்டு முழு நேர பணியாக செயல்படுத்தப் படும்.

தினமும் பல்லாயிரக்கணக் கான மக்கள் விட்டுச் செல்லும் கழிவுப் பொருட்களை கையாள தேவஸ்தானத்தினர் ஒரு திடக் கழிவு நிர்வாக திட்டத்தினை கொண்டு வந்தனர். நிபுணர்களால் உருவாக்கப்பட்ட இத்திட்டம் நடைமுறைக்கு வந்த பின் அப் பழுக்கற்ற தூய்மை கண்களுக்கு தெரிய ஆரம்பித்தது. காற்றாலை மற்றும் சூரிய மின் ஆலை கொண்டு திருமலையின் மேலேயே மின்சாரத்தினை உற்பத்தி செய்கின்றனர். இது இந்த மலைப்பகுதியைத் தூய் மையாக வைத்திருப்பது மட்டு மல்லாமல், இறைப் பணிக் காக மக்கள் கொடுத்த பணத்தை மிச்சப்படுத்துவது மட்டுமல்லா மல், அரசாங்கம் சார்ந்த மின்சார விநியோகத்தை குறைக்கவும் உதவுகிறது.

திருமலையில் தூய்மையை யும் பசுமையையும் பராமரிக்க தேவஸ்தானத்தினர் இவ்வளவு முயற்சி எடுக்கும்போது இந்த நற்பணியினை செம்மனே தொடர பக்தர்களான நாமும் உதவு வோம்.

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## सप्तदशः पाठः பாடம்-17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| अन्नम् | = உணவு | चिरम् | = வெகுகாலம் | कुर्युः | = செய்வார்கள், வேண்டும் |
| पुरा | = முன்பு | आलस्यम् | = தாமதம் | कुर्यात | = நீங்கள் செய்வீர்கள், வேண்டும் |
| घृतम् | = நெய் | अर्थम् | = ஆக, தனக்காக | कुर्याम | = செய்வோம், வேண்டும் |

### வினாக்கள்

1. अद्य पाकं के कुर्युः?
2. गृहे घृतं नास्ति।
3. तटाके जलं नास्ति।
4. आलस्यं करोषि किम्?
5. त्वं तत्र चिरं आसीः किमर्थम्?
6. अस्मदग्रजार्थं अहं तत्रासम्।
7. देवः पुरा प्रथमं जलं अकरोत्।
8. वयं पाकं सम्यक् कुर्याम।
9. घृतं नास्ति चेत् शाकं कथं कुर्याम?
10. अस्मद्गृहे युष्मद् जनकः तूष्णीमेव आलस्यं करोति; त्वमपि अत्रासि किं? शीघ्रं स्नानं कुरु।

1. இந்த வேளை யார் சமையலைச் செய்வாரோ?
2. உங்களுக்காக நானே செய்ய வேண்டும்.
3. இல்லாவிட்டால் யார் செய்வது?
4. உங்கள் தந்தை.
5. இந்த வேளை அவர்கள் எல்லாரும் உங்கள் வீட்டில் இருக்கிறார்களா என்ன?
6. ஒன்றும் இல்லை; அப்படியே இருக்கட்டும்.
7. உங்கள் பிள்ளைகள் எங்கள் வீட்டில் உணவுக் காக இருக்கிறார்கள்.
8. அப்படியா, நீங்கள் கொஞ்சம் (சிறிது) இங்கு இருங்கள்.
9. நீங்கள் கட்டிலில் இருக்கிறீர்களா?
10. வெறுமனே இருங்கள்.

### விடைகள்

1. இந்த வேளை சமையல் யார் செய்கிறார்கள்?
2. வீட்டில் நெய் இல்லை.
3. குளத்தில் தண்ணீர் இல்லை.
4. தாமதம் செய்வாயா?
5. நீ அங்கு வெகுகாலமாக இருந்தாய் எதற்கு?
6. எங்கள் தலைவனுக்காக நான் அங்கு இருந்தேன்.
7. கடவுள் முன்பு முதலில் நீரைப் படைத்தார்.
8. நாங்கள் சமையலை நன்றாகச் செய்வோம்.
9. நெய் இல்லாமல் சமையல் எப்படிச் செய்வது?
10. எங்கள் வீட்டில் உங்கள் அப்பா (தந்தை) வெறுமனே தாமதம் செய்து கொண்டிருக்கிறார்; நீயும் (நீ கூட) இங்கு இருக்கிறாயா என்ன? விரைவாக குளி.

1. अद्य पाकं कः करोति?
2. युष्मदर्थं अहमेव करोमि।
3. नो चेत् कः करोति?
4. युष्मत्पिता।
5. अद्य ते सर्वे युष्मद् गृहे सन्ति वा?
6. किमपि नास्ति; तथैव भवतु।
7. युष्मद् पुत्राः अस्मद् गृहे अन्नार्थं सन्ति।
8. एवं वा, यूयं किञ्चिदत्र भवन्तु।
9. यूयं मञ्चे सन्ति वा?
10. तूष्णीं भवन्तु।

தெலுங்கு மூலம்: மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி, தொகுப்பு: மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா
தமிழாக்கம்: டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



# நமாமி கோவிந்தா

## பஞ்சகவ்ய பொருட்கள்

வேத கலாச்சாரத்தில் பசுவிற்கென்று தனிச் சிறப்புண்டு. பசு மானிடர்களுக்கு அளிக்கும் சாணம், கோமியம், பால், நெய், தயிர் முதலானவை விலை மதிப்பற்ற பஞ்ச கவ்யங்களாகச் சிறப்புப் பெற்றுள்ளன.




இப்பஞ்ச கவ்யத்தின் வாயிலாக தி.தி.தே. 15 வகையான ஆயுர்வேதப் பொருட்களை உற்பத்தி செய்கின்றது.

### தூபம்

அவனி தூப சூர்ணம், தரணி அகர்பத்தி, தாத்ரி சாம்பராணி கப், வைஷ்ணவி, தூப் ஸ்டிக்ஸ் மற்றும் வாராஹி தூப்கோன்ஸ் எனும் பெயர்களில் ஐந்து வகையான பொருட்களை தயாரிக்கின்றனர். பசுஞ் சாணத்துடன் அகரு முதலான மூலிகைகளுடன் தயாரிக்கப்படும் இத்தூபம் நுண்கிருமிகளான பாக்டீரியா, வைரஸ் முதலானவற்றினால் ஏற்படுகின்ற காற்று மாசினை குறைத்து புனிதமாக்குகின்றன.

### தன்சிகா பற்பொடி

பண்டைய ஆயுர்வேத மருத்துவ சாஸ்திரங்களில் கூறியுள்ளபடி பசுஞ்சாண பஸ்மம், சைந்தவலவணம், இலவங்கம், ஊசிரிக போன்ற மூலிகைகளால் பற்பொடி தயாரிக்கப்படுகிறது. இதனை உபயோகிப்பதனால் வாய், பற்கள், ஈறுகள் சம்மந்தப்பட்ட நோய்கள் வராமல் தவிர்க்கப்படுகின்றன.

### ப்ருத்வி - விபூதி :

பண்டைய சாஸ்திரங்களில் கூறியுள்ளபடி பஞ்சபூதாத்ம ஹோமகுண்டத்தில் பசுஞ்சாணம், கரிக, கற்பூரம், பசுநெய் வாயிலாக தயாரிக்கப்படுகிறது. இந்த விபூதியை அணிவதால் ஐச்வரியம் கிட்டும். இது ஆரோக்கியத்திற்கும் நன்மை பயக்கும்.




### இரண்மயி

மூலிகை ஃபேஸ் பேக் : தோலின் நிறத்தை மெரு கேற்ற மஞ்சள், மஞ்சிஷ்டா, லொத்து போன்ற மூலிகைகளால் தயாரிக்கப்படும் ஃபேஸ் பேக் உபயோகிப்பதனால் முகப்பரு, கரும் புள்ளிகள், கண் விழி கருவளையங்களைக் குறைக்கலாம்.

### மஹி

மூலிகை சோப்பு : கோமிய அர்கம், நால் ஸமாராதி தைலம் போன்ற இயற்கை பொருட் களால் தயாரிக்கப்படுகிறது. இது தோலை





















பளபளப்பாக வைத்து, தோலினை காத்து, முகப்பரு, தோல்வியாதிகளை போக்குகின்றது. மேலும், இது தோல்மீது படர்ந்துள்ள நுண் கிருமிகளை அழிக்கின்றது.




**கச்யபி :**

மூலிகை ஷாம்பு : கோமியம், சீகைக்காய், குங்குடு காய், தேங்காய் எண்ணெய் போன்ற கலவையுடன் தயாரிக்கப்படும் இந்த ஷாம்பு உச்சந்தலை பாதுகாப்பிற்கு உபயோகப்படுகின்றது.

**உர்விநாஜல் - ட்ராப்ஸ் :** கோமயம், கோக்ஷீரம், எள் எண்ணெய் போன்றவற்றால் தயாரிக்கப்படும் இந்த சொட்டு மருந்து தினமும் காலையில் மூக்கில் இரண்டு சொட்டு விடுவதினால் தலைவலி, அடிக்கடி ஏற்படும் சளித்தொல்லை குறையும். கண், செவிகள் வலிமை பெறும்.

**நந்தினி - கோஅர்க :** கோமியத்தை சிறப்பு செயல்பாடுகளுடன் வெப்பப்படுத்தி, அதன் வாயிலாக வரக்கூடிய ஆவியை குளிர்வித்து திரவ வடிவில் மாற்றப்படுகிறது. இதனை உலகம் முழுவதிலும் புற்று நோய், சுவாசக் கோளாறு, மஞ்சள் காமாலை போன்ற நோய்களுக்குக்கான சிகிச்சைக்கு மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்.

**பூமி - மூலிகை தரை கிளினர் :** கோமிய அர்க பிரதான திரவியமாக எலுமிச்சை, பைன் ஆயிலால் இந்த தரை கிளீனர் தயாரிக்கின்றனர். தரையில் அசுத்தங்களை போக்குவதோடு மட்டுமின்றி நுண் கிருமிகளையும் அழிக்கவல்லது. நறுமணத்துடனும் திகழக்கூடியது.

**க்ஷம - வறட்டை , புவதி காடங்க்லாக்ஸ்:** நாட்டு மாடுகளின் வாயிலாக சேகரிக்கப்படும் பசுஞ்சாணம், நெல் உமி, மர உமிகளோடு தயாரிக்கப்படும் இதனை யாகங்களுக்கு உபயோகிக்கின்றனர். தகனத்திற்கும் இவற்றினை உபயோகிப்பது மேன்மையாகக் கருதுகின்றனர்.

**பஞ்சகவ்ய தயாரிப்புகள் - அகர்பத்திகள்-ஸ்வாமி சித்திரப்படங்கள்**

**விற்கப்படும் இடங்கள்**

**திருமலை**

01. ஸ்ரீவாரி லட்டு கௌண்டர் காம்ப்ளெக்ஸ்
02. ஸ்ரீவாரி ஆலயம் எதிரில்
03. லேபாக்ஷி எம்போரியம் எதிரில்
04. அன்னப்பிரசாதம் காம்ப்ளெக்ஸ்

**திருப்பதி**

01. தி.தி.தே. நிர்வாகக் கட்டிடம் எதிரில், கே.டி. சாலை.
02. ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலய வளாகம்.
03. தியான மந்திரம், (கோவிந்த ராஜ ஸ்வாமி தேர் வீதி)
04. ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி ஆலய வளாகம்.
05. ஸ்ரீநிவாசம், விஷ்ணு நிவாசம் கட்டிடத் தொகுதிகள்.
06. ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி ஆலய வளாகம்.
07. திருப்பதி இரயில் நிலையம் (கிழக்கு)

**திருச்சானூர்**

01. ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலய வளாகம்.

**ஸ்ரீநிவாச மங்காபுரம்**

01. ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலய வளாகம்.

திருவேங்கடமுடையான் கைங்கர்யத்திற்கு மற்றும் பிற முக்கியமான தி.தி.தே. ஆலய கைங்கர்யங்களுக்கு உபயோகப்படுத்தப்படும் மலர்களால் சித்திரப்படம் மற்றும் அகர்பத்திகள் தயாரிக்கப்படுகின்றன. இவை மிகவும் புனிதமானவை.



-செயலாட்சித்தலைவர்,
தி.தி.தேவஸ்தானம்.



# நமாமி கோவிந்தா

**பஞ்சகவ்யம் :** பசுவிடமிருந்து பெறப்படும் பஞ்சகவ்யத்தை திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார் தம் ஆயுர்வேத தயாரிப்பாக கொண்டு வந்துள்ளனர். இதன் ஒவ்வொரு தயாரிப்பும் ஒவ்வொரு வடிவில் மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்பட்டவை.

**அகர்பத்திகள் :** திருமலை–திருப்பதி சுற்றுப்புறப்பகுதிகளில் அமைந்துள்ள தி.தி.தேவஸ்தான ஆலயங்களில் கொலுவீற்றிருக்கும் தேவதா மூர்த்திகள் சூடிக்களைந்த மலர்களைக் கொண்டு ஏழு விதமான நறுமணங்கள் கொண்ட பரிமள அகர்பத்திகள் தயாராகின்றன.

**புஷ்ப பிரசாதம் :** திருமலை–திருப்பதி சுற்றுப்புறப்பகுதிகளில் அமைந்துள்ள தி.தி.தேவஸ்தான ஆலயங்களில் கொலுவீற்றிருக்கும் தேவதா மூர்த்திகள் சூடிக்களைந்த மலர்களைக் கொண்டு சித்திரப் படங்கள், சாவிச்சங்கிலிகள், பேப்பர் வெய்ட், டாலர்கள், பேனாக்கள் மற்றும் பேனா ஸ்டான்ட் போன்றவை உலர் மலர் தொழில்நுட்பத்தின் வாயிலாக தயாரிக்கப்படுகின்றன.







Designed by SVBC,TTD

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## பஞ்சகவ்யத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்கள்

### ஊர்வி நாசல் ட்ராப்ஸ்
சளி, தலைவலி தடுக்க, கண், காது & மூக்கின் செயல்பாடுகளை மேம்படுத்த...

### பூமி ஹெர்பல் ப்ளோர் க்ளீனர்
தரையைச் சுத்தப்படுத்தவும், கிருமிகளை அழிக்கவும் மற்றும் இயற்கை நறுமணத்திற்கும்...

### நந்தினி கோ அர்க்
நீண்ட நாள் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வழிவகுக்கும்.

### க்ஷமா கௌ டங்க் கேக்ஸ்
யாகம் மற்றும் ஹோமங்களில் பயன்படுத்தப் படுகிறது.

### பூவட்டி கௌ டங்க் லாக்ஸ்
யாகம் மற்றும் ஹோமங்களில் பயன் படுத்துவதால் காற்றுத் தூய்மையாகும்.

### அவனி தூப் சூர்ணம்
நறுமணமாக வரும் வாசனை நம்மை காக்கும்.

### தரணி அகர்பத்தி
பூமித்தாய் போன்று நன்மை நிறைந்தது.

### தாத்ரி சாம்பராணி கப்ஸ்
நல்ல ஆரோக்கியத்தை அளிக்கும்.

### வைஷ்ணவி தூப் ஸ்டிக்ஸ்
காற்றைத் தூய்மைப்படுத்தும்.

### வாராஹி தூப் கோன்ஸ்
தூபப்புகையானது சுற்றுப்புறச் சூழலை தூய்மைப்படுத்தும்

### பிருத்வி விபூதி
ஐச்வர்யத்தைப் பெருக்கும்.

### தன்ஷிகா ஹெர்பல் டூத் பவுடர்
பற்கள் மற்றும் ஈறுகளை காக்கும்.

### ஹிரண்மை ஹெர்பல் ஃபேஸ் பேக்
அழகையும் நிறத்தையும் காக்கும்.

### மஹி ஹெர்பல் சோப்
தோலை பாதுகாக்கும்.

### கஸ்யபி ஹெர்பல் ஷாம்பு
தலைமுடியைப் பாதுகாக்கும்.






# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## சூடிக்களைந்த மலர்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள்

### சித்திரப்படம் & சாவிச்சங்கிலி (உலர் மலர் தொழில்நுட்பத்தில்)




### அகர்பத்திகள் (சூடிக்களைந்த மலர்களால் தயாரிக்கப்பட்டவை)



# கோமாதா (எங்கள்) குலமாதா



முப்பத்து முக்கோடி தேவதைகள் கொலுவிருக்கும் காமதேனுவான இந்த கோமாதா மஹாலக்ஷ்மியின் இருப்பிடமாகக் கருதப்படுகிறது. அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனான திருவேங்கடமுடையானை "கோவிந்தா" என்று அழைப்பர். ஈன்ற தாயிற்கும் மேலான இதத்தாயான இந்த பசுக்களிடமிருந்து கிடைக்கும் பால், தயிர், நெய், கோஜலம், கோமலம் போன்ற பொருட்களின் கலவையே "பஞ்சகவ்யம்" என்பர். பஞ்சகவ்யம் ஆயுர்வேதத்தில் பெரிய அளவில் உபயோகிக்கப்படுகிறது. கோமாதா நமக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம். இதனைக் கருத்தில் கொண்டு தி.தி.தேவஸ்தானத்தினர் "நமாமி கோவிந்தா" என்ற பெயரில் "பஞ்சகவ்ய" பொருட்களை பக்தர்களின் ஆரோக்கியத்திற்காக தயாரித்து வழங்கியுள்ளனர்.

மாதா ருத்ராணாம், துஹிதா வசூநம்
சுவசாஉஉதித்யானா மம்ருதஷ்ய நாபி:
ப்ர நு வோசம் சிகுதுஷே ஜனாய
மா கா மனாகா மதிதம் வதிஷ்ட — ரிக் வேதம்

ருத்தரர்களுக்குத் தாயாகவும், வசுக்களுக்கு மகளாகவும், ஆதித்தியர்களுக்கு சகோதரியாகவும், மானிடர்களுக்கு அமிழ்தமான பாலை அளிக்கும் அன்னையாகவும் விளங்குகிறது. அப்பேற்பட்ட பசுக்களை இந்து பண்பாட்டில், சம்பிரதாயங்களில் ஒப்பற்ற தாயாகவும், அனைத்து தேவதைகளின் வடிவமாகவும் போற்றி வணங்குவர்.

தொடர்புக்கு : 18004254141
மின்னஞ்சல் : helpdesk.ttd@tirumala.org







# யோகம் ஒரு தெய்வீகம்

திரு. பிரயோதரன் சுகுமார்,
சென்னை, 8838252312

தொன்மையான பாரத தேசத்தில் வாழ்ந்த பண்டைய கால மகரிஷிகள், மகான்கள், ஞானிகள், இயற்கையை தீவிரமாக ஆராய்ந்து மனித வாழ்க்கையின் மர்மங்களையும், புதிர் நிறைந்த உயிர் பற்றிய இரகசியங்களையும் அறிந்து கொள்ள உருவாக்கியதே "யோகம்" என்கிற உன்னத மார்க்கமாகும். யோகம் என்கிற சொல்லிற்கு "இணைதல்" அல்லது சிற்றறிவு படைத்த மனிதன் பேரறிவு மிக்க, எல்லையில்லா பிரம்ம ஞானம் மிக்க பரமாத்மாவோடு இணைந்து இரண்டறக் "கலத்தல்" என்பது பொருளாகும். பண்டைய கால மகரிஷிகள் அழிவில்லாத படைப்புத் தத்துவங்களின் பிரம்ம இரகசியங்களை யோக சாதனையின் மூலமாக உணர்ந்து அதனை அடையக் கூடிய வழிமுறைகளை மனித குலமனைத்தும் நன்மை அடையும் பொருட்டு வகுத்துக் கொடுத்து உள்ளனர்.

மனிதனின் மண்ணுலக ஜீவித வாழ்க்கையின் ஓட்டமானது மிகவும் அதிசயமானது. அது எந்த சமய சந்தர்ப்பத்திலும், எப்போது வேண்டுமானாலும் பூமியில் ஒரு முடிவுக்கு வந்து விடக்கூடியதாக இருந்தாலும் இதன் இடையே யோக சாதனையின் மூலமாக தன்னை மேன்மைப்படுத்திக் கொண்டு பேரறிவு மிக்க உயிரின் அணுபிரமான பேராற்றல்களுடன் இணைத்துக் கொள்ள நம்மாலான முயற்சிகளை இடைவிடாது மேற்கொள்வதற்கு யோகம் ஒரு தெய்வீகப் பாதையைக் கொண்டுள்ளது.

இந்த பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனின் நோக்கமும் எப்படியாவது மனத்தில் இடைவிடாமல் தோன்றும் எண்ணங்களை ஒடுக்கி "மன அமைதி"யைக் காண வேண்டுமென்பதே யோக மார்க்கத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்து வருகிறது. இந்த இமாலய சாதனையை எட்டிப் பிடிக்க ஒவ்வொரு யோக மார்க்கத்திலும் பலவிதமான வழிமுறைகளை பின்பற்றிச் சொல்கிறார்கள்.

## பக்தி யோக முறைகள்

சித்த சலனத்தினால் சிதறி ஓடும் மனத்தை ஒரு நிலைப்படுத்த சாதகன் தான் வழிபடும் இஷ்ட தெய்வத்தின் மீது நம்பிக்கை கொண்டு ஏகாந்தத்தில் அமர்ந்து பக்தி செலுத்தி வரும் உபாசனை முறையாகும். இயற்கையின் மேல் கவர்ந்து செல்லப்படும் மனிதனின் உணர்ச்சிகளின் வேகத்தை கட்டுப்படுத்தி தியானத்தின் மூலமாக குறைந்தபட்சம் மன அமைதியைப் பெறுவதையே பக்தி யோகம் முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

பக்தி யோகத்தில் மக்கள் கூட்டாக பகவத் நாம சங்கீர்த்தனம் செய்வது, தன்னிலை மறந்து ஆடிப்பாடுதல், பஜனைப் பாடல்கள் போன்ற இவற்றின் மூலமாக மன அமைதிக்குண்டான வழியை சாதாரண பரம பக்தர்கள் தேடிக் கொண்டுள்ளார்கள். இவ்வாறு பக்தர்கள் தாங்கள் வழிபடும் இஷ்ட தெய்வத்தின் கருணையினால்

வாழ்க்கையில் உண்டாகும் பல பிரச்சனைகள், கஷ்ட நஷ்டங்கள், மனக்குறைகள், மன வேதனைகள் போன்ற இவற்றை வேண்டுதல் கள், பிரார்த்தனைகள், கோரிக்கைகள், விண்ணப்பங்கள் மூலமாக இஷ்ட தெய்வத்திடம் முறையிட்டு பிராயசித்தம் செய்து தங்களுடைய வாழ்க்கையில் “மன நிறைவை” காண்கிறார்கள்.

**அஷ்டாங்க யோக முறைகள்**

பண்டையக் காலத்தில் ஸ்ரீபதஞ்சலி முனிவர் யோகத்தின் எட்டு வழிமுறைகளை தொகுத்து அஷ்டாங்க யோகம் என்ற முறையை உருவாக் கினார். அஷ்டாங்க யோகத்தின் பயிற்சி முறைக ளானது அதன் முதல் நான்கு நிலைகளான இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் போன்றவை மனிதனின் புலன்கள் யாவும் வெளியுலகத்தின் மீதே நாட்டம் கொண்டு அலைந்து திரிந்து இயற்கையின் புற விஷயங் களின் மேல் கவனத்தை தீவிரமாக கொண்டு வருவதால் சித்த விருத்தியின் வசம் சென்று சிக்கிக் கொள்ளாமல் மனத்தை ஒருநிலைப் படுத்த உதவி செய்கிறது.

இயமம், நியமம் ஒரு ஒழுக்கம் நிறைந்த கட்டுக்கோப்பான வாழ்க்கை முறைக்கும்,

**பண்பாட்டு ஆடை**

- ⇨ திருமலையானின் வி.ஜ.பி. தரிசனத்திற்கும் மற்றும் ஆர்ஜித சேவைக்கு வரும் பக்தர்கள் பாரத பண்பாட்டு ஆடைகளையே அணிந்து வர வேண்டும்.
- ⇨ ஆண்கள் : வேட்டி, மேற்துண்டு அல்லது குர்தா பைஜாமா.
- ⇨ பெண்கள் : புடவை, இரவிக்கை/பாவாடை, தாவணி/ பஞ்சாபி டிரஸ்-சுடிதார்.

ஆசனங்களின் பயிற்சியானது நமது உடலில் சூட்சுமமான முறையில் இயங்கி கொண்டுள்ள ஆறு ஆதார சக்கரங் களான மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணி பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞா, சகஸ்ராரம் ஆகிய இவற் றின் விழிப்புணர்ச்சியைப் பெற்று நமது உடலில் ஓய்வு நிலை யில் எந்த பயனையும் விளைவிக்காமல் உறங்கி கொண்டுள்ள குண்டலினி மகா சக்தியின் எல்லையற்ற பேராற்றல்களின் எழுச்சியைப் பெற்று ஞானத்தையும், விவேகத்தையும் வளர்த்து மனித வாழ்கையின் பூரணத் துவத்தை அடைய உதவி செய்கிறது.

பிராணாயாமம் பயிற்சியானது நமது உடலில் ஒரு ஒழுங்கற்ற முறையில் வலது நாசி, இடது நாசி என தானாகவே அதன் நடைமுறையை மாற்றி, மாற்றி ஓடிக் கொண்டிருக்கும் மூச்சை சீர்ப்படுத்தி “கும்பகம்” என்கிற மூச்சடக்க சித்தியில் கட்டுப்படுத்தி அதன் மூலமாக

## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ஸ்ரீரங்க$_3$வாஸீ ஸ து யாமுநார்யோ நிசம்ய*
*ராமாநுஜத$_3$ர்சிதார்த்த$_2$ம் ।*
*ஆக$_3$ம்ய காஞ்ச்யாம் வரத$_3$ம் மஹாத்மா தே$_3$வ்யா யுதம்*
*ப்ராணமத$_3$ந்தரங்கை$_3$: ॥*
(13)

**ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்த யாமுநாசார்யர் எனும் மஹாபுருஷரான ஆளவந்தார், ராமாநுஜர் காட்டிய அவ்வேதப் பொருளைக் கேள்வியுற்று அந்தரங்க சிஷ்யர்களோடு கூடக் காஞ்சிக்கு எழுந்தருளி பெருந்தேவித் தாயாரோடு கூடிய பேரருளாளனை வணங்கினார்.**



– “ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது

**தடை விதிக்கப்பட்ட பொருட்கள்**

**திருமலை ஆலயத்திற்குள் தேங்காய், செல்போன், டிஜிட்டல் கைகடிகாரங்கள் போன்ற மின்னணு பொருட்கள், காலணிகள், வெடிப்பொருட்கள், பிளாஷ்டிக் பொருட்கள் எடுத்து செல்லுதல் கூடாது**

மனத்தில் அலை பாயும் எண்ண ஓட்டங்களின் மேல் இடைவிடாமல் "அரித்து" கொண்டிருக்கும் சித்த விருத்தியை கட்டுப்படுத்தி வைக்க உதவி செய்கிறது.

பிராணாயாமத்தின் மூச்சடக்க பயிற்சியில் பெறும் கும்பக சித்தியின் மூலம் காற்று (வாயுவின்) புயல் வேகத்தை ஸ்தம்பனமாகவோ அல்லது அசைவில்லாமல் நிற்க வைத்து ஆரோக்கியமான தேக பலத்தை கூட்டும் முயற்சியாகவும், அதுபோல் உடலில் விரயமாகும் பிராண சக்தியின் ஆற்றல்களை கட்டுப்படுத்தி அதன் வீர்யத்தை சேமித்து வைத்துக் கொள்ளவும் உதவி புரிகிறது.

## ஸ்ரீவித்யா யோக மார்க்கம்

பிராணாயாமம் போன்ற மூச்சடக்க பயிற்சி முறைகளை முதியவர்கள், பெண்கள் போன்றவர்கள் எளிமையான முறையில் பயில்வதற்கு மாற்று வழியாக ஸ்ரீவித்யா யோகம் மற்றும் சித்த யோக மார்க்கம் எந்தவிதமான பக்க விளைவுகளும் அற்ற ஒரு பாதுகாப்பு அரணாகவும், உயிர் காக்கும் கவசமாகவும் உள்ளது. ஸ்ரீவித்யா யோக மார்க்கத்தின் முக்கிய நோக்கமே ஐம்புலன்களின் மேல் பாய்ந்து செல்லும் பிராண சக்தியின் ஆற்றல்களை புலனடக்கம், மனதடக்கம், பேச்சடக்கம் ஆகிய இந்த சாதனைகளை மந்திர சாதனை என்னும் மூலமந்திர மற்றும் பீஜாட்சரங்களை வாய் விட்டு உதடுகளில் உச்சரிக்காமல் மனத்தின் வழியே அஜபா என்கிற முறையில் பயிற்சி புரிவதாகும். அஜபா பயிற்சியானது நம்முடைய பெரு நாக்கில் ஓடும் பிராண கலையின் எழுச்சியைப் பெற்று நாபியின் வசமுள்ள மணிபூரக சக்கரத்தில் பிராணனின் ஓட்டத்தை சீர்ப் படுத்தி அதன் சேமிப்பை பெறும்போது ஏறுமுக பிராணனின் வளர்ச்சியை அடையலாம்.

## சித்த யோக மார்க்கம்

பண்டைய கால சித்தயோக மார்க்கத்தை நிறுவிய ஸ்ரீஅகத்தியர் 18 சித்த மகா புருஷர்களுக்கு நேரிடையாக தீட்சை அளித்து 1) சித்த மருத்துவம், 2) யோகம், 3) தவம், 4) நிஷ்டை, 5)ஞானம் ஆகிய இவற்றின் மேன்மைகளை மக்களுக்கு உபதேசித்துள்ளார்கள். "காணாக்கண், கேளாச் செவியின்" மூலம் "சமாதி யோகத்தில்" ஆழ்ந்து செல்லும் புதுமையான வழி முறைகளை ஒப்பற்ற மனோன்மணி சித்தியின் வாயிலாக கற்பிக்கப் பட்டுள்ளன. கண்ணின் பார்வை மற்றும் செவியின் கேட்கும் தன்மை (கண், காது) இவ்விரண்டின் செயல்களை சமன்வயப் படுத்தி எண்ணத்தை தற்காலிகமாக ஓய்வு கொள்ள செய்வதாகும். அத்துடன் பேச்சின் ஓட்டத்தையும் நிறுத்தி கேளாச் செவியின் மூலம் மௌனத்தின் பேரமைதியின் ஆழத்தில் நாத ஒலியை அமிர்த்த வாக்காகப் பெறுவதே ஒப்பற்ற சித்தயோக முறையாகும்.

## வைணவ குறுக்கெழுத்துப் புதிர் 71 க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | வி | ண் | ண | க | ர் | | யி | கே | 2 கை | 3 தி |
| ரு | கை | 4 பா | | லி | 5 ஹ | வா | 6 இ | ரா | ம | ன் | ரே |
| நா | ங் | ல | 7 ஆ | வ | ரி | ழ் | ரி | தி | த் | 8 அ | தா |
| ரா | ம | ந | கா | று | த் | மா | | வ | | | யு |
| ய | ல் | ர | ச | ற் | து | ம் | | ஸ் | | ள் | க |
| ண | மே | சி | ரா | யி | வா | 9 ந | 10 ஸ்ரீ | ர | ங் | க | ம் |
| பு | ர் | ம் | ஜ | 11 வ | ர் | | 12 இ | 13 ச | | ரி | |
| ர | ல | ம | ன் | ரா | பி | ம | ரா | 14 இ | | சூ | 15 கோ |
| ம் | 16 அ | ர் | 17 எ | ம் | பெ | ரு | மா | ளா | ர் | ய | ழி |
| ள் | க | ங் | க | ங் | பா | 18 உ | னு | | | த் | கு |
| 19 சோ | ளி | ங் | க | பு | ர | ம் | ஜ | | | 20 நி | த் |
| 21 தி | ரு | க் | க | ண் | டி | யூ | ர் | டு | ண் | 22 த | தி |

# திருநாவாய்

**108 திவ்ய தேச வைபவம்**

**67**

**புராண வரலாறு :**

யோகம் செய்வதில் வல்லவர்களான ஒன்பது யோகிகள், ஒவ்வொரு தலமாக சேவித்து இங்கு வரும்போது, யோகத்திற்கு ஏற்ற தலம் இதுவே என்று, இங்கேயே தங்கி, யோகத்தவத்தில் ஈடுபட்டார்கள். காலம் விரைந்து சென்றது.

ஒவ்வொரு யோகியாக, இவ்வுலகத்தை விட்டு மறைந்தனர். இப்படி எட்டு யோகிகள் மறைந்தனர். ஒன்பதாவது யோகி, தனிமைப்படுத்தப்பட்டு, வாட்டத்துடன் யோகமாகிய தவத்தைச் செய்யாமல், ஊண், உறக்கமின்றி சோகத்துடன் இருந்தார். அப்போது இத்தலத்து எம்பெருமான் அவர் முன்பு தோன்றி, எட்டு யோகிகளையும் வரவழைக்க, எட்டு யோகிகளும் அந்த இடத்தை விட்டு அகலாமல், அங்கேயே மறைந்து யோகத்தில் ஈடுபடுவதாகச் சொல்ல, இவரும், அப்படி மறைந்து யோகத்தவம் செய்யும் முறையைக் கற்று, எம்பெருமானையும் தன்னுடன் எடுத்துச் செல்ல விரும்ப, பகவான் அதைத் தடுத்து, ஊர் பாழாகாமல் இருக்க, பகவான் அங்கேயே இருக்க வேண்டும் என்பதை உணர்த்த ஒன்பதாவது யோகியும் மறைந்து வந்து வழிபடலானார். இவர் மறைந்து வாழ்ந்து பகவானை வழிபட்ட காரணத்தால் இவ்வூர் "திருநவயோகி" எனப்பட்டு, காலப்போக்கில் "திருநாவாய்" என்று மாறியுள்ளதாகச் சொல்வர்.

**இன்னொரு செய்தி :**

கஜேந்திரன் என்கிற யானை, இங்குள்ள புஷ்கரணியில் நீராடி, பூக்களைப் பறித்து இந்த எம்பெருமானை அர்ச்சிக்க விரும்பியபோது, கஜேந்திரனுக்கு முன்பாகவே, மகாலக்ஷ்மி வந்து புஷ்பங்களைப் பறித்து, பகவானுக்கு அர்ச்சிக்க எடுத்துச் சென்றுவிட்டதை அறிந்து, "ஏற்கனவே, ஒரு முதலை என்னுடைய காலைக்கவ்வி, பூக்களால் பகவானை அர்ச்சிக்க இயலாமல் தடுத்தது. இங்கேயும், இதே நிலையா? என்று வருந்தி பகவானின் சந்நிதி வாசலில் உயிரைவிடப் போகும் சமயம் பகவான் தோன்றி, கஜேந்திரனுக்கு ஆறுதல் சொல்லி, பிராட்டியை இனி மேல் எனக்காகப் பூக்களைப் பறிக்காதே எனச்சொல்ல, திருமகள் வருந்தி உடலை வருத்தித் தவம் செய்யத் துவங்கினாள். பகவான், தாயாரிடம் கஜேந்திரனைப் போன்ற அடியவர்களின் பெருமையைச் சொல்லி, நாம் இருவருமாக, கஜேந்திரன் வாபியில் (பொய்கை) இருந்து பறித்து அர்ச்சிக்கும்



– உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.



புஷ்பங்களை ஏற்றுக் கொள்வோம் என்று சொல்ல, பங்கஜ வல்லியும் பகவானுடன் அமர்ந்து, கஜேந்திரன் புஷ்பங்களால் செய்த பூஜையை பகவானுடன் சேர்ந்து ஏற்றுக் கொண்டாளாம்.

**சிறப்புகள் :**

தாயாருக்குத் தனிச் சந்நிதி உள்ளது. இந்த திவ்ய தேசத்தில் "பித்ரு கடன்கள்" செய்வது விசேஷம் என்பர்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | நாராயணன், நாவாய் முகுந்தன் (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) |
| தாயார் | : | கமலத்துதடாகவல்லி. |
| விமாநம் | : | வேத விமாநம். |
| தீர்த்தம் | : | செங்கமலப் பொய்கை. |
| ப்ரத்யக்ஷம் | : | நவயோகிகள், மஹாலக்ஷ்மி, கஜேந்திரன். |
| ஆகமம் | : | நம்பூதிரிகளின் பூஜா க்ரமம் |
| மங்களாசாஸனம் | : | நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார். |

**விசேஷம்:**

ஆசார்ய ஹ்ருதயம் "பிரிந்து துன்பக் கடல் கடத்தும் விஷ்ணுபோத ஆந்ரு சம்ஸ்யம் (பேரருள் வழங்கும் குணம்) நாவாயிலே நிழல் எழும்" என்கிறது. இப்பெருமானை, மலர்களால் அர்ச்சித்து வழிபட்டால் விருப்பங்கள் நிறைவேறும் என்பது கஜேந்திரன், பகவானை வேண்டி நமக்காக அளித்த வரம் ஆகும். இப்பெருமான் "இருக்கும் திருநாவாய் அவன் எழில் நாரணநம்பி" என்கிறார் திவ்யசூரி சரித ஆசிரியர்.

**த்யானச்லோகம்**

*ஸஜ்ஜோநாவபுரேஸரோஜஸரஸஸ்தீரேவிமாநோத்தமே*
*வேதே சைவ ப்ருஹத் ப்ரஸூநரமணி கேளீ*
*விலோல: பர: |*

*தய்யா ஏவமுதே ப்ரஸந்நவதநோ நாராயணோ*
*தக்ஷிணாம்*
*ஆசாமிச ஸுரேச தேவநிகரை:பச்யந்*
*ஸமாஸ்தேஸுகம் ||*

**பாசுரம்**

*"அருளா தொழிவாய் அருள் செய்து,*
*அடியேனைப்*
*பொருளாக்கியுன் பொன்னடிக் கீழ்ப்புகவைப்பாய்*
*மருளேயின்றி உன்னை என்னெஞ்சத் திருத்தும்,*
*தெருளே தருதென் திருநாவாய் என் தேவே!"*
– நம்மாழ்வார்

*"பறந்து திரிதரினும் பாவியேன் உள்ளம்*
*மறந்தும் பிறிது அறியமாட்டா - சிறந்த*
*திருநாவாய் வாழ்கின்ற தேவனை அல்லால் என்*
*ஒரு நாவாய் வாழ்த்தாது உகந்து"*
– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

**நாமாக்கள்**

621. *ஓம் ஸ்வக்ஷ: நம:*

அழகிய திருக்கண்களை உடையவனே.

*ஓம் வஹ்நிஸமந்யை நம:*

பத்தர், முக்தர், நித்யஸூரிகள் என்று அனைவரையும் தாங்கும் பெருமாளுக்குச் சீற்றம் வராமல் காப்பவளே.

622. *ஓம் ஸ்வங்க: நம:*

அழகிய திருமேனி உடையவனே.

*ஓம் ஜோஷமாணாயை நம:*

எப்போதும் ப்ரீதியுடன் இருப்பவளே.

623. *ஓம் ஸதாநந்த: நம:*

ஸகலவித ஆனந்த ஸ்வரூபனே.

*ஓம் குணாத்யயாயை நம:*

அடியார்களின் ஸத்வ, ரஜஸ், தமஸ் என்கிற முக்குணங்களை அழிப்பவளே.

624. *ஓம் நந்தி: நம:*

எப்போதும் சந்தோஷமாக இருப்பவனே.



*ஓம் காதம்பர்யை நம:*

கர்மாக்களுக்குத் தகுந்த பலன் அளிக்க நினைக்கும் பெருமாளையும் மது உண்ட வனைப் போல மதிமயங்கச் செய்பவளே.

*625. ஓம் ஜ்யோதிர் கணேஸ்வர: நம:*

நித்ய ஸுரிகளின் கூட்டத்துக்குத் தலைவனே.

*ஓம் ப்ருஷ்மரதரயை நம:*

பெருமாளின் திருமேனியில் மிகுந்த ஈடுபாடு உடையவளே.

*626. ஓம் ஜிதாத்மா நம:*

பக்தர்களிடம் ஜயிக்கப்பட்ட மனத்தை உடையவனே.

*ஓம் விதாத்ர்யை நம:*

பெருமாளின் கைங்கர்யத்தில் நித்யர்களையும் முக்தர்களையும் நியமிப்பவளே.

*627. ஓம் விதேயாத்மா நம:*

பக்தர்களிடம் அங்கிய ரூபஸ்வரூபனே.

*ஓம் உஜ்வலஹஸ்திகாயை நம:*

வறுமையும், பயமும் போகும்படி நன்கு பிரகாசிக்கிற வரத அபய முத்ரைகளை உடையவளே.

*628. ஓம் ஸத்கீர்த்தி: நம:*

நற்கீர்த்தி உள்ளவனே.

*ஓம் அக்ஷோப்யாயை நம:*

அடியவர்களை காப்பதில் அவர்கள் எவ்வளவு குற்றம் செய்தவர்களாக இருந்தாலும் சிறிதும் குழப்பம் அடையாமல் காப்பவளே.

*629. ஓம் ச்சிந்நஸம்சய: நம:*

தன் ஸௌலப்யத்தால் சந்தேகங்களை நீக்குபவனே.

*ஓம் ஸர்வதோபத்ராயை நம:*

கோசாலை, பாடசாலை, யாகசாலை, பாகசாலை என்கிற நான்கு இடங்களிலும் நித்ய சாந்நித்யம் செய்பவளே, எல்லாவித மங்களங்களையும் செய்பவளே, எல்லாவித மங்களங்களையும் அளிப்பவளே.

*620. ஓம் உதீர்ண: நம:*

ஊனக்கண்ணோடும் காணும்படி அவதரிப் பவனே.

*ஓம் வயஸ்யாயை நம:*

சிநேகித எண்ணம் உள்ளவளே.

*ஸ்ரீமதே பக்தமாவதி நாயிகா ஸமதே ஸ்ரீநாராயண பரப்ரஹ்மணே நம:*

**குறிப்பு :**

சென்னை – கள்ளிக்கோட்டை ரயில் மார்க்கத்தில் இவ்வாலயம் அமைந்து உள்ளது.

திவ்ய தேச வைபவம் வளரும்...

## ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம், திருப்பதி



**திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெறுவது போன்றே ஸ்ரீவைகானச ஆகமப்படி நித்ய பூஜைகளும், உற்சவங்களும் திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாளுக்கும் நடைபெறுகின்றது. அதிகாலை 5 மணியளவில் சுப்ரபாத சேவை தொடங்கி, விச்வரூபம், தோமாலை, அர்ச்சனை, சாற்றுமுறை, உச்சிகால பூஜை, சந்த்யாகால பூஜை, முடிவாக இரவு ஏகாந்த சேவை என்று நடைபெற்று வருகின்றன.**

**வாராந்திர உற்சவம், மாத உற்சவத்தில் ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாளின் திருஅவதார நட்சத்திரமான உத்திரத்திலும், ஸ்ரீநிவாசப் பெருமாளின் திருஅவதார நட்சத்திரமான திருவோணத்திலும், ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாளுக்கு இடமளித்த ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாளின் திருநக்ஷத்திரமான ரோகிணியிலும் அந்தந்த பெருமாளுக்கு விசேஷ அலங்காரத்துடன் வீதிப் புறப்பாடும், பௌர்ணமியன்று ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாளுக்கு கருட சேவை நடைபெறுவது விசேஷம். மேலும் ஆண்டுதோறும் பிரம்மோத்ஸவம் மிகவும் சிறப்பாக நடைபெறும்.**

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

மணக்கால் நம்பிகள் வாழித்திருநாமம் தொடர்ச்சி...

**(தென்னரங்கர் சீர் அருளைச் சேர்ந்திருப்போன்)**

ஸ்ரீமந்நாதமுனிகளின் திருப்பேரரான ஆளவந்தார் ராஜ போகத்தில் சுகமாக இருந்தபோது மணக்கால் நம்பி அவருக்கு விருப்பமான தூதுளை கீரையை தினமும் திருமடப் பள்ளிக்குக் கொடுத்து வந்தார். ஆளவந்தாரும் அதனை அமுது செய்து வந்தார். அவர் இதனை விசாரியாமல் இருக்கவே, நம்பி நான்கு நாளைக்குத் தூதுளைக் கொடுப்பதை தவிர்த்தார். ஆளவந்தாரும் தூதுளை இன்றியே இருக்கவே, அதனைக் கொடுப்பவரைத் தாம் காண நினைத்து, மறுநாள் வந்தபோது அவரை ஆளவந் தாரிடம் அழைத்துச் சென்றனர்.

“தூதுளை கொடுப்பதின் நோக்கம் என்ன?” என்று கேட்க, நம்பியும் “அவரைக்காண இதுதான் வழி” என்று சொன்னார். மேலும், அவருடைய பாட்ட னாரான ஸ்ரீமந்நாதமுனிகள் தேடி வைத்த பொரு ளும், அந்நிதி கிடக்கிற இடமும் அதனை ஸமர்ப்பிக்க வும் தான் வந்ததாகக் கூறுவர். ஆளவந்தாரும் மிக்க ஆர்வத்துடன் அப்பொருளைச் சொல்லும்படி கேட்க, நம்பிகளும் அன்று முதல் கீதையின் செம்மைப் பொருள் தெரியும்படி பதினெட்டு அத்தியாயத்தை யும் அருளிச் செய்தார்.

நெல்லுக்குப் பால் கட்டக் கட்டத் தலை வணங்குமா போலே, ஆளவந்தாருக்கும் கொஞ்சம் கொஞ்சமாக ஸம்ஸாரத்தில் ருசியில்லாமை பிறந்தது. நம்பிகளும் ஆளவந்தாரைக் கூட்டிக் கொண்டு திருவரங்கம் சென்று அழியாத மகா நிதியான பெரிய பெருமாளுடைய முடிவில்லாத எழிலைக் காணச் செய்தார். ஸ்ரீமந்நாதமுனிகள் காட்டிக் கொடுத்த அர்த்தங்கள் எல்லாம் திருவரங் கனின் சீர் அருளால் ஆளவந்தாருக்கு மணக்கால் நம்பி அருளாலே சேர்ந்தது. இதனால் “சீர் அருளைச் சேர்ந்து இருப்போன்” என்றபடி.

**(தாசரதி திருநாமம் தழைக்க வந்தோன்)**

அயோத்தி மன்னனான தசரத சக்கரவர்த்தி திருமகன் இராமன் தாசரதி என்று அழைக்கப்பட்டார். நம்பிகளுக்கு அமைந்த தனியனில், “பரசுராமனைப் போல பொறுமையை (பூமியை) விடாதவராய், இராமனைப் போல புண்ய ஜனங்களை (ராக்ஷஸர் களை) பாதிக்காதவராய், பலராமனைப் போல மது பான மதம் இல்லாதவரான நாலாவது இராமனான மணக்கால் நம்பியை உபாஸிக்கிறோம்” என்று அருளியதற்கு ஏற்ப, தாசரதி திருநாமம் தழைத்தபடி.

வேதாந்த தேசிகரும் யதிராஜ ஸப்ததியில் (7) “அநுஜ்ஜித க்ஷமா” என்ற சுலோகத்தின் மூலம் மணக்கால் நம்பியை மறக்காமல் இருப்போம் என் றது காண்க. மேலும் “பகவத் பக்தியாகிற பாற்கடலில் குடைந்தாடப் பெற்றவராய், அதனால் தாபத்ரயம் என்று சொல்லப்படும் ஆத்மாவைப் பற்றி வருவது – ஜுரம், தலைவலி, மனக்கஷ்டம் முதலானவை. காற்று, மழை, இடி, மின்னல் முதலானவற்றால் வரும் துன்பம், பசு, பறவை முதலானவற்றால் வரும் துன்பம் என்னும் மூன்று தாபங்களும் நீங்கப் பெற்றவரான ஸ்ரீராமன் என்னும் மணக்கால் நம்பியைப் பற்றுகிறேன்” என்ற தனியன் மூலமும் தாசரதி என்ற திருநாமம் தழைத்தபடியாகும்.

### (தமிழ் நாதமுனி உகப்பைத் தாபித்தான்)

தமிழ் நாதமுனி – சேதநரோடு செறிந்து ஆராயப் படுமதான த்ராவிடமான தமிழையே அடையாள மாக உடையவர் நம்மாழ்வார் என்று பிள்ளை லோகம் சீயர் திருவாய்மொழி நூற்றந்தாதியில் 26 "பன்னுதமிழ் மாறன்" என்பதற்குச் சேர உரைப்பர். அந்த தமிழ் மாறன் அருளால் ஸ்ரீமந்நாதமுனிகள் நாலாயிர திவ்விய ப்ரபந்தத்தைப் பெற்றார். அதனால் தமிழ் நாதமுனியானார் என்றபடி. அவர் அருளால் ஆசார்யரான உய்யக் கொண்டார் பரமபதித்த பின்பு, அவர் சொல்லியபடியே சொட்டைக் குலத்தினவரான ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு திருப்பேரனார் அவதரித்து, அவருக்கு யமுனைத் துறைவர் என்று திருநாமமிட்டு நம் தர்சனம் வளரச் செய்யும்படி எல்லா தர்சன ரகசியங்களையும் உபதேசித்தருளினார். அதுவரை மணக்கால்நம்பி தர்சனத்தை நிர்வகித்து வந்தார். ஆர்வத்தோடு ஸ்ரீமந்நாத முனிகள் நியமனத்தை தம் ஆசார்யரான உய்யக் கொண்டார் சொல்லியபடி, ஆளவந்தாரை நம் தர்சன ஆசார்யனாக ஆக்கி ஸ்ரீமந்நாதமுனிகள் உகப்பை நிலை நிறுத்தியதால் (தாபித்ததால்) ஆசார்ய ஞான பரிபாலனம் மிகவும் செய்யத்தக்கது என்றபடி.

(நேசமுடன் ஆரியனை நியமித்தான்) நேசம் – அன்பு. ஆரியன் – ஆர்ய: என்ற வடசொல் தமிழில் ஆர்யன் ஆயிற்று. பல பொருள்களில் ஒன்றான வித்வான் என்று பொருள். திருவாய்மொழியை ஓதுவித்தல், அதனுடைய அர்த்தத்தை அருளிச் செய்தல் ஆகிய இரண்டையும் வளர்த்தவர் நம்பி.

ஆதலால் இவரை ஆசார்ய பதம் ஏறிப் போந்தவர் என்று ப்ரமேயரத்னம் இரண்டாம் பிரகரணத்தில் கூறியது காண்க. அத்தகைய ஆசார்ய பதத்தை மணக்கால் நம்பி தம் இறுதிக் காலத்தில் ஸ்ரீமந்நாதமுனிகளின் திருப்பேரனாரான ஆளவந்தாரைப் பார்த்து "ஸ்ரீமந்நாதமுனிகளோடு ஞானம் மற்றும் வம்ச ஸம்பந்தமுடையவரான "நீர் அவர் திருவடிகளே தஞ்சமாக எண்ணி இரும்" என்றும் கூறியதற்கு ஏற்ப "இரந்து சொல்லுகைக்கு மணக்கால் நம்பியோடு ஒப்பர்" என்று பகவத் விஷயத்தில் 9–3–5 இல் அருளியது காண்க. திருவாய்மொழி அதன் பொருள் ஆகியவற்றை உபதேசித்து நம் தரிசனத்துக்கு ஆசார்ய பதமான ஆரியனாக நியமித்தார் என்பர்.

### (நீணிலத்தில் பதின்மர்கலை நிறுத்தினான்)

நீள் + நிலம் – நீளுதல் – பெருமையாதல். பெருமை பொருந்திய இடம் – ஸ்ரீரங்கம். ஸ்ரீரங்கத்தில் பதின்மர் கலையான திவ்ய ப்ரபந்தத்தை தன் சீடர்களான ஆளவந்தார், தெய்வத்துக்கரசு நம்பி, கோமடத்துத் திருவிண்ணகரப்பன், சிறுப்புள்ளுடைப் பிள்ளை, வங்கிபுரத்து ஆச்சி ஆகியோர்க்கு பதின்மர் கலையில் அமைந்த தர்சன தாத்பர்ய விசேஷங்களைக் கற்பித்ததனால் "பதின்மர்கலை நிறுத்தினான்" என்றபடி.

வேதாந்த தேசிகர் அருளிய குருபரம்பரா ஸாரத்தில் மணக்கால் நம்பி சீடர்கள் ஐவர் என்றது காண்க. அதுமட்டுமன்றி, "திருவாய்மொழி துவய மந்த்ரத்தின் விரிவாக்கமாதலால், ஸம்ஸாரமாகிற விஷம் தீண்டப் பெற்றவனுக்கு துவயம் விஷம் தீர்க்கும் மருந்தாய் இருக்கும்" என்பர் நம்பி. மேலும் பத்து ஆழ்வார்கள் அருளிச் செயலில் ஆழ்ந்த ஞானம் கொண்டு திருவாய்மொழி ஈடு என்னும் வியாக்யானத்தில் நம்பிள்ளை என்னும் ஆசார்யர் நம்பியின் ஐதிகங்களையும் நிர்வாகத்தையும் காட்டி உரைப்பர். நம்பியின் நிர்வாகத் திறனை திருமாலை 37ஆம் பாட்டு, திருவாய்மொழி 2–6–2, 6–5–5, 6–6–1, 6–8–1, 9–3–5 ஆகிய இடங்களில் காணலாம். இதனால் நம்பிகள் பதின்மர் கலையைப் பரப்பினபடி.

### (மாசி மகந்தனில் விளங்க வந்துதித்தான்)

தமிழ் மாதங்களில் பதினோறாவது மாதம் மாசி மாதமாகும். இம்மாதமானது பிரிதொன்றுக்கில்லாத சிறப்புடையதாய் கொள்ளத்தக்கதானது என்பர். மாசி மகம் சேர்ந்த பௌர்ணமி முழுமை பெற்றதாகும். வருடத்தில் இந்த மாசி மக பௌர்ணமி சிறப்புடையதாகும். பெருமாள் கோயில்களில், மாசி மகம் என்பதுமாசி மாத பௌர்ணமியுடன் கூடி வரும் மக நட்சத்திர நாளில் பெருமாளை கருட வாகனத்தில் கடற்கரைக்கு எழுந்தருளப் பண்ணி தீர்த்தவாரி கண்டருளுவது காணலாம். மாசி மகத்தைக் "கடலாடும் நாள்" என்றும், "தீர்த்தமாடும் நாள்" என்றும் அழைப்பர். ஆண்டாளும் தைமாதம்

முழுவதும் காமன் வரும் இடத்தை அலங்கரிப்பதைச் சொல்லும்போது **''தையொரு திங்களும் தரை மண்டலமிட்டு மாசி முன்னாள் ஐய நுண் மணல் கண்டு தெருவணிந்து அழகினக்கு அலங்கரித்து அணங்க தேவா''** (நாச்.திரு.1–1) என்கிறாள். "மாசி முன்னாள்" என்றால் மாசியில் பூர்வ சுக்ல பக்ஷமாகிற முதல் பதினைந்து நாள். அத்தகைய சிறப்பு பெற்ற மாசி மாதத்தில் சுக்ல பக்ஷ சதுர்தசியோடு கூடிய மக நக்ஷத்ரத்தில், அந்த நக்ஷத்ரம் புகழ் பெற, புதன் கிழமையில் உதித்தவர் மணக்கால் நம்பி ஆவர்.

***(மால் மணக்கால் நம்பி பதம் வையகத்தில் வாழியே)*** மால் – மையல், பெருமை, கருமை என்று பல பொருள். பெருமை என்பதற்குச் சேர நித்ய ஸுரிகளில் ஒருவரான குமுதாக்ஷரின் அம்சமாக அவதரித்தவர். இங்கு மணக்கால் நம்பியின் மையலானது தம் ஆசார்யரான உய்யக் கொண்டார் திருமாளிகையில் பன்னிரண்டு ஆண்டு ஸேவை பண்ணிப் படியாய்க் கிடந்து மணக்கால் நம்பி என்னும் திருநாமம் பெற்றதாகும். மேலும் நம்பிக்குப் பெருமையாவது எம்பார் என்னும் ஆசார்யர் அருளியபடியே லக்ஷ்மிநாதனாகிற பெருங்கடலில், நம்மாழ்வாராகிய மேகம், கருணை என்னும் நீரைப்பருகி, ஸ்ரீமந்நாதமுனிகளாகிற மலையிலே பொழிந்தது.

அந்நீர் உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி ஆகிய இரு அருவிகள் மூலம் ஆளவந்தாராகிய பெரிய ஆற்றை அடைந்து மேலும் சென்றதை அருளுவர். அவ்வாறே பகவத் ராமாநுஜ அவயவ பிரபாவத்தில் இராமாநுசருக்கு "ராகவக்போலௌ" என்கிறபடியே ஸ்ரீராமமிச்ரர் என்னும் மணக்கால் நம்பிகள் இரண்டு கன்னங்களாகத் திகழ்கிறார் என்று கூறுவர். அப்படிப்பட்ட பெருமையுடைய மணக்கால் நம்பி பதமான திருவடிகள் இவ்வுலகத்தில் வாழ வேண்டும்.

தொடரும்...

# பெருமாளால் எல்லாம் முடியுமா?



**ஒரு ஆசிரமத்தில் இரண்டு துறவிகள் இருந்தார்கள். ஒருவர் பெருமாளை பரிபூரணமாக நம்பியவர். இன்னொருவர் எதையும் சந்தேகம் கொள்பவர். ஒரு நாள் அவர்கள் இருவருக்குமிடையே வாக்குவாதம் உண்டானது. பெருமானால் எதுவும் செய்ய முடியும். அவர் என்ன வேண்டுமானாலும் செய்யக் கூடியவர் என்றார் முதலாமவர். இல்லை. அது முடியாது. நீ சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள இயலாது என்றார் மற்றவர்.**


**அப்பொழுது அங்கே பெருமாளின் வாகனமான கருடன் வந்து சேர்ந்தார். அவர்களிடம் விவரம் கேட்டார். முதலாமவர் சொன்னார், "கருடனே! உனக்குத் தெரியாததா? பெருமாளால் என்னதான் ஆகாது... சொல் பார்க்கலாம். மற்றொரு துறவி இதனை ஒத்துக்கொள்ள மீண்டும் மறுத்தார். பார்த்தார் கருடன். என்ன செய்யலாம்? மீண்டும் முதலாமவர் பேசினார்.**

**கருடனே! நீ இங்கே வரும் முன் நாராயணன் என்ன செய்து கொண்டு இருந்தார்? சொல்... நான் வரும் பொழுது பெருமாள் ஊசி முனைக்குள் யானைகளை செலுத்தி விளையாடிக் கொண்டு இருந்தார் என்றார் கருடன். கை கூப்பினார் முதல் துறவி. "ஆகா! பகவான் நாராயணனால் முடியாத காரியம் உண்டா! என்ன! அவரது மகிமையே மகிமை" இதுதான் உண்மையான பக்தி. நம்பிக்கை. உண்மைதானே பெருமானால் முடியாத காரியம் உண்டா என்ன?**

**தொகுப்பு : திரு. நா. சிவராமன், சென்னை**

# ஶ்ரீமத் பகவத்கீதை

தெலுங்கு மூலம் : திரு.கே. விஸ்வநாத சாஸ்திரி
தமிழாக்கம் : டாக்டர் சி. கோவிந்தசாமி



பரமாத்மா, உடல் வேறு ஆத்மா வேறு என்னும் விஷயத்தைப் பல்வேறு நிலைகளில் நமக்கு எடுத்துரைக்கிறார். பதார்த்தங்களை (பொருட்களை)ச் சித்து, அசித்து என இரண்டு வகைகளாகப் பிரித்துக் காட்டுகிறார். சித் என்பது இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் இருக்கும் பொருளாகும். அது ஆத்மா ஒன்றே ஆகும். ஆத்மாவை தவிர நித்தியமானது வேறொன்றும் இல்லை. தேகமும் மற்றப் பொருட்கள் யாவும் ஒரு காலத்தில் வந்து சில காலங்களில் மறைந்து போகக்கூடியவை. எனவே, அழியக் கூடியது எதுவும் அசித்துவாகிறது. பரமாத்மா நமக்கு சித்து அசித்துப் பற்றி அறிந்து கொள்ளும் விவேகத்தையும் உபதேசம் செய்துள்ளார். மேலும், தான் கூறி வரும் விஷயத்திற்கு பலம் சேர்க்கும் விதமாக கீழ் சுலோகத்தில் இவ்வாறு கூறுகிறார்.

*''வேதாவிநாஷினம் நித்யம் ய ஏனமஜமவ்யயம்*
*கதம் ஸ புருஷ: பார்த கம் காதயதி ஹந்தி கம்''* 2–21

பார்த்தனே! ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய அர்ஜுனா! இந்த ஆத்மா அழிவற்றது. பிறப்பற்றது. மாற்றமில்லாதது என்று அறிந்த ஒருவன் யாரையாவது கொல்லவோ, கொலை செய்யப்பட காரணமாக இருக்க முடியுமா? எனவே, ஆத்மாவிற்கு எந்தவிதமான செயல்பாடும் இல்லை. இந்த உண்மையை அறிந்த பின்பு, நான் என்ற அகம் அழிந்து, ஆத்மாவே நான் என்பதை உணருகிறான். ஆத்மா எந்தவொரு செயல்பாடும் இல்லாதது என்பதை உணர்ந்த பின்பு, இந்த செயலை நான் செய்தேன் என்று எவரும் சொல்ல மாட்டார்கள். "கதம்" எப்படி? எந்த விதத்தில் சொல்ல முடியும்? ஒன்றைப் பற்றி அதன் தன்மையைப் பற்றி அறியாத வரையில் அறியாமையில் பேசுவார்களே தவிர, உண்மை தன்மையை அறிந்த பின்பு இவ்வாறெல்லாம் பேச முடியாது என்பதை பகவான் மீண்டும் ஒரு முறை எடுத்துக் கூறுகிறார்.

*''வேதாவிநாஷினம் நித்யம் ய ஏனமஜமவ்யயம்....''* என்னும் இச்சுலோகத்தைக் கேட்ட பின்பு, நீண்ட நாட்களாக மனதிலே இருந்து வருகின்ற சந்தேகம் ஒன்று எழுகிறது. ஒரே விஷயத்தை "அவிநாஷிது தத் வித்தி..." என்றும், "ந ஜாயதே ம்ரியதே வ" .... என்றும் ஆத்ம ஸ்வரூபத்தை, ஆத்மாவின் தன்மையை அழிவற்றது, நித்தயமானது என்று ஒரு முறை மட்டும் கூறாமல் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறுவதின் காரணம் என்ன? மீண்டும் மீண்டும் ஒரே விஷயத்தைக் கூறுவது என்பது ஆழ்ந்த அறிவுடையோருக்குக் குறைப்பாடாகாதோ? அறிவு குறைப்பாடாகாதோ? அறிவு குறைபாடுள்ளவர்கள் சொல்லியதையே மீண்டும் மீண்டும் சொல்வார்கள். ஆனால் பரமாத்மா எதற்காக இவ்வாறு எடுத்துக் கூறுகிறார். இந்த கேள்விக்கு பதில் என்னவென்றால், தெளிவானவர்கள் ஒரு விஷயத்தை ஒரு முறை தான் எடுத்துக் கூறுவார்கள் என்று நினைப்பதே தவறாகும். அவர்கள் தான் சொல்ல வந்த விஷயத்தை ஒரு முறைக்குப் பத்து முறை கூறுவார்கள் எந்த விஷயமானலும் ஒருவர் மற்றொருவருக்குச் சொல்லிய உடனே சொல்லிய சொல்லின் கருத்து மற்றவர்களுக்குத் தெளிவாக விளங்கிவிடும் என்று கூறிவிட முடி

யாது. ஒருவர் கூறிய கருத்து கேட்டவுடனே பரிபூர்ணமான ஞானத்தை கொடுத்து விடாது. உண்மையில் பரிபூர்ணமான ஞானம் பெறுபவர்கள் யாரெனில் கேட்பவர்களைக் காட்டிலும் கூறுபவர்களே அந்த ஞானத்தைப் பெறுகிறார்கள்.

சங்கீதம் பாடும் ஒருவர் பாட்டை மட்டுமே பாடி விட்டு செல்வதில்லை. முதலில் ஆளாபனை செய்து, பிறகு கீர்த்தனை, பின்பு சில சங்கதிகள் என்று தொடர்வதைப் பார்க்கலாம். அதற்குக் காரணம் எதுவொன்றுமே ஒருமுறை கேட்டவுடனே மனதில் வந்து நின்று விடாது.

ஒருமுறைக்கு பலமுறை பல விதமான முறைகளில் பழகிய பின்பே மனதில் நிலைப் பெறுகிறது. இதற்கு குறைந்தது ஒரு மணி முதல் ஒன்றரை மணி அளவு கால அவகாசத்தைச் சங்கீத வித்வான்களே எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது என்றால் நம்மைப் போன்ற சாதாரணமானவர்கள் ஒரு விஷயத்தை மனதில் நிறுத்துவதற்கு எத்தனை முறை முயற்சி செய்ய வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

சங்கீதம் என்பது சின்ன விஷயமில்லை. அது "காந்தர்வ சாஸ்திரம்", "தேவவித்யா" இதற்கும் இதே நியமம் தான்.

அதேபோல, ஒரு தந்தை தன் மகனைப் பார்த்து படி, நன்றாகப்படி என்று மீண்டும் மீண்டும் கூறுவது மட்டுமே அல்லாது, பலவிதமான கதைகளும், சிறந்த அறிஞர்களுடைய வாழ்க்கை வரலாற்றுக் கதைகளும், பண்டிதர்கள் கதைகளும் மீண்டும் மீண்டும் சொல்வது எதற்காக?

சொல்லவந்த கருத்து மகனுடைய மனதில் நன்றாக பதியும்படி செய்ய வேண்டும் என்ற நோக்கம் தானே. மேலும் தன்னுடைய மகள் புகுந்த வீட்டுக்குப் போகும் போது தன்னுடைய அனுபவங்களையெல்லாம் ஒரு தாய் தன் மகள் மனதில் என்றும் இருக்கும்படி மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லி எச்சரித்து அனுப்பி வைக்கிறாளே எதற்காக? தன் மகள் அங்கு நல்லபடியாக சுகமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே!

எனவே புரிந்து கொள்வதற்கு சிரமமான விஷயத்தை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறி அவர்கள் மனதில் பதியும்படி செய்கின்றோம். எனவே, ஆத்மா அழிவற்றது என்றோ, நித்தியம் என்றோ சொல்லும்போது அதைக்கேட்டு அப்பொழுதே மறந்து விடுகின்றோம். அப்படி இல்லாமல் மீண்டும் மீண்டும் கூறுவதால் அது ஒருவர் மனதில் அழியாமல் நிற்பதுடன் அந்த விஷயத்தின் அவசியத்தையும் சிறப்பையும் உணர்த்த முடிகிறது. அதனால் அவ்விஷயத்தை ஆழ்ந்து சிந்தித்து மனதில் பதித்து வைத்துக் கொள்ள முடிகிறது.

எனவே, பரமாத்மா ஒரு விஷயத்தை மீண்டும் மீண்டும் எடுத்துக்கூறி நம் மனதில் நன்றாகப் பதியும்படி செய்தார்.

தொடரும்...

## ஜூலை மாத பண்டிகைகள், பருவ தினங்கள் மற்றும் தி.தி.தே. ஆலய உற்சவங்கள்

| | |
|---|---|
| 03-05 | ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார உத்ஸவம் |
| 04-05 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி புஷ்பயாகம் |
| 08 | பெரியாழ்வார் சாத்துமுறை |
| 08-17 | தாள்ளபாக்கம் ஸ்ரீசித்தேஸ்வர ஸ்வாமி, சென்னகேசவ ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 09-11 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம் |
| 10 | சாதுர்மாத விரதமாரம்பம், தொலி ஏகாதசி, நாதமுனிகள் திருநட்சத்திரம் |
| 13 | குரு பூர்ணிமா, வியாச பூர்ணிமா |
| 14-15 | அப்பளாயகுண்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி புஷ்பயாகம் |
| 17 | திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம் |
| 23 | ஆடிக் கிருத்திகை |
| 23-26 | திருப்பதி ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 29 | சக்கரத்தாழ்வார் திருநட்சத்திரம், பிரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமி திருநட்சத்திரம் |

# ஆணும் பெண்ணுமாகிய அம்பை (எ) சிகண்டி

–திரு. எஸ். ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம், 94881 39685

அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்பது பெரியோர்களின் வாக்கு. அறம் வெல்வதும், அதர்மம் வீழ்வதும் கூட அந்த தெய்வமே முன் வந்து திட்டம் தீட்டினால் தான் சாத்திய மாகும்.

பாண்டவர்கள் தரப்பு வென்று, அவர்களை விடவும் அதிக படைபலத்தையும், நிகரற்ற போர் வீரர்களையும் தன்னகத்தே கொண்ட கௌரவர்களின் தரப்பு தோற்பதற்கான ஒவ்வொரு முன்னேற்பாட்டையும் பரம்பொருளாகிய ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா செய்து வைத்திருக்கிறார் என்பதை மகாபாரதக் கதை நெடுகிலும், குறிப்பாகக் குருக்ஷேத்திரத்தில் பதினெட்டு நாட்கள் நடைபெற்ற பெரும் யுத்தத்தின் ஒவ்வொரு சம்பவத்திலும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

பாண்டவர்களை மிஞ்சிய படைபலத்துடன் பல பெரும் வீரர்களையும் தங்கள் வசம் வைத்திருந்த கௌரவர்கள் அனைவரும் மகாபாரத யுத்தத்தில் மடியக் காரணம் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் சங்கல்பமே ஆகும்.

அத்தகைய ஒரு சங்கல்பமே முற்பிறவியில் அம்பை என்ற பெயரில் அரச குலத்தில் பிறந்த பெண் தன்னைப் பெரும் துன்பத்தில் ஆழ்த்திய பீஷ்மரைத் தனது அடுத்த பிறவியிலும் சிகண்டியாக வந்து அழிப்பதற்குக் காரணமானது.

துருபத ராஜனுக்கு முதலில் மகளாகப் பிறந்து, பிறகு யக்ஷன் ஒருவனின் உதவியால் ஆண் தன்மையைப் பெற்ற சிகண்டி, பீஷ்மரைப் பழி வாங்குவதற்கு மகாபாரத யுத்தம் தொடங்கும் வரையிலும் காத்திருக்க வேண்டியதாயிற்று.

துரியோதனனின் தொடையைப் பிளப்பேன் என்றும், துச்சாதனனின் கதையை முடிப்பேன் என்றும் சபதம் செய்திருந்த பீமன், தன்னைச் சபையில் அவமானப்படுத்தியவர்களின் உடலிலிருந்து பீறிடும் ரத்தத்தினைப் பூசிக் கொண்ட பிறகே எனது கூந்தலை முடிந்து கொள்வேன் என்று சபதம் எடுத்திருந்த திரௌபதி ஆகிய இருவரை விடவும், பீஷ்மரின் கதையை முடிப்பேன் என்று சபதம் செய்திருந்த சிகண்டியின் காத்திருப்புக் காலம் மிகவும் நீளமானது.

முற்பிறவியில் அம்பையாக இருந்தபோது செய்த சபதத்தினை நிறைவேற்ற அடுத்தப் பிறவியில் துருபதனின் மகளாகப் பிறப்பு எடுத்தது முதற்கொண்டு தன் பழியுணர்வை மறக்காமல் சிகண்டி காத்திருக்க வேண்டியதாயிற்று.

இது மட்டுமா... கௌரவர், பாண்டவர் இரு தரப்பினரிடையே போர் மூளும் என்று நம்பிக் காத்திருந்த இம்மூவருக்கும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா ஒரு தாற்காலிக அதிர்ச்சியைக் கொடுத்தார் என்று தான் கூற வேண்டும்.

ஆம்... பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையில் சமாதானம் செய்வதற்காக துரியோதனனிடம் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா தூதுச் சென்றபோது பீமன், திரௌபதி, சிகண்டி ஆகிய மூவரும் திகைத்துத்தான் போயினர்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையில்**
**இரத்ததானம் செய்யுங்கள்!**
**திருமலையப்பனின் இறையருள் பெறுங்கள்!!**

- இரத்தம் தானத்தால் மட்டுமே வழங்க முடியும். இரத்தம் தேவைபடுபவர்களுக்கு அளிப்பதன் மூலம் ஒரு உயிரையும் காப்பாற்ற முடியும்.
- கலியுக வைகுண்டமான திருமலையில் இரத்த தானம் செய்வது புண்ணியமாகும்.
- திருமலை அஸ்வினி மருத்துவமனையில் தினமும் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தானம் அளிக்கலாம்.

தொலைபேசி எண் : 0877-2263601

**இரத்தம் தானம் செய்யுங்கள்!**
**ஆபத்தில் உள்ளோரை காத்திடுங்கள்!!**

ஒரு வேளை ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் தூது பலித்து விட்டால், அதன் பலனாகக் கௌரவர்கள் மனம் திருந்தி பாண்டவர்களுக்கு ராஜ்ஜியத்தில் உரிய பங்கினைக் கொடுத்து விட்டால் பிறகு இரு தரப்பினரிடையே யுத்தம் ஏது? துரியோதனாதியரை பீமன் கொல்வதோ, அவர்களின் ரத்தத்தைப் பூசி திரௌபதி தன் கூந்தலை முடிப்பதோ, பீஷ்மரைச் சிகண்டி கொல்வதோ எப்படி நடைபெறமுடியும்?

பீமனும், திரௌபதியும் தங்கள் சபதத்தினை நிறைவேற்ற இன்னொரு பிறவியை எடுக்க வேண்டியதுதானா? அவர்களுக்காவது இனி வரப்போவது இரண்டாவது பிறவி. ஆனால், சிகண்டி பீஷ்மரைப் பழிவாங்குவதற்காக ஏற்கனவே இரண்டாவது பிறவியை எடுத்துள்ள நிலையில், இப்பிறவியில் அது முடியவில்லை என்றால், மூன்றாவதாக இன்னொரு பிறவியை அல்லவா எடுக்க வேண்டும்? அது வரையில் நெஞ்சில் கனன்று கொண்டிருக்கும் பழியுணர்வை எவ்வாறு அடக்கி வைப்பது? இம்மூவரின் கவலையையும் துரியோதனன் போக்கி விட்டான். பாண்டவர்களுடன் போரிட்டு மடிந்தாலும் மடிவேனே தவிர, அவர்களுக்கு ஊசி முனையளவு இடம் கூடக் கொடுக்க மாட்டேன்" என்று துரியோதனன் காட்டிய பிடிவாதத்தினால் மகாபாரதப் போர் தவிர்க்க முடியாததாயிற்று.

பீமன், திரௌபதி, சிகண்டி ஆகிய மூவரின் சபதங்கள் நிறைவேறுவதற்கான ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் தெய்வீக சங்கல்பம் துரியோதனனின் பிடிவாதம் என்னும் வடிவத்தில் வந்து அருள் புரிந்தது என்று தான் கூற வேண்டும். மகாபாரதப் போரில் பாண்டவர்களின் சார்பாகப் போரிட்ட சிகண்டி அவ்வப்போது பீஷ்மரின் முன் சென்று நின்று "என்னுடன் சண்டையிட வாருங்கள்" என்று அறைகூவல் விடுத்தான்.

ஆனால்... "பெண்களுக்கு எதிராகவோ, பெண்ணாகவும் ஆணாகவும் (பாலினத் திரிபுடன்) இருப்பவர்களுக்கு எதிராகவோ போரிடுவது எனது வீரத்திற்கு இழுக்கு" என்று கூறி அந்த அழைப்பினை நிராகரித்து விட்டார் பீஷ்மர்.

பெண் என்பவள் இயற்கை யாகவே ஆணை விட பலம் குறைந்தவள் என்ற காரணத்தினால், "பலமற்றவள்" என்ற பொருளில் "அபலை" என்று அழைக்கப்படுகின்றாள். இந்நிலையில், க்ஷத்திரிய குலத்தில் பிறந்த வீரம் மிகுந்த ஆண்கள் ஒரு பெண்ணையோ, பெண் தன்மை உடைய ஆணையோ எதிர்த்துச் சண்டையிட மாட்டார்கள்.

இதையொட்டியே, பீஷ்மரும், இப்பிறவியில் முதலில் பெண்ணாகப் பிறந்து, பின்னர் ஆணாக மாறிய சிகண்டியை எதிர்த்துப் போர் புரிய மறுத்தார். மகாபாரதப் போரின் ஐந்தாம் நாளிலும், ஏழாம் நாளிலும் இவ்வாறு மறுத்தார் பீஷ்மர். சிகண்டி தம் மீது பானங்களை ஏவினாலும், எதிர்க்கணை தொடுக்காமல் பீஷ்ம பிதாமகர் அமைதி காத்தார்.

ஆனால், ஒன்பதாம் நாள் போரிலும் மீண்டும் பீஷ்மரை வலுச்சண்டைக்கு அழைத்தான் சிகண்டி. அன்றைய தினப் போரில் பாண்டவர் படைகளின் முன்னால் சிகண்டி தன் தேரைச் செலுத்த, அவனுக்குப் பின்னால்தான் பாண்டவர்கள் முதலான பாண்டவர் தரப்பு வீரர்கள் அணிவகுத்தனர்.

இன்றைய தினத்திலும் சிகண்டியின் பானங்களுக்கு எதிர் பாணம் தொடுக்காமல் பீஷ்மர் பொறுமை காத்தார். பீஷ்மர் உயிரோடிருக்கும் வரையில் துரியோதனனின் தரப்புக்குத் தோல்வியில்லை.

அதே சமயம், அறத்தின் திருவுருவமான யுதிஷ்டிரரின் தரப்பு வெற்றி பெற வேண்டுமானால் பீஷ்ம பிதாமகர் நிச்சயம் வீழ்த்தப்பட வேண்டும் என்று ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா சங்கல்பித்து விட்டார்.

பீஷ்மரை வீழ்த்த என்ன செய்ய வேண்டும் என்பது ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவுக்குத் தெரியும். ஆனால், அந்த உபாயத்தை பீஷ்மரின் திருவாக்கினாலேயே பாண்டவர்கள் கேட்க ஒரு வழியை கண்டுபிடித்தார் அவர்.

மகாபாரதப் போரின் ஒன்பதாம் நாளிரவு பாண்டவர்களையும் உடன் அழைத்துக் கொண்டு பீஷ்மரின் கூடாரத்திற்குச் சென்றார் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா.மனித சரித்திரத்தில் அது வரையில் யாரும் இன்னொருவரைப் பார்த்து இப்படியொரு கேள்வியைக் கேட்டிருக்க மாட்டார்கள்.

ஆனால், பகவானின் சங்கல்பப்படி, பாண்டவர்கள் கேட்டனர்."எங்கள் மரியாதைக் குரிய பிதாமகர் பீஷ்மரே! நாளைய போரில் தங்களை நாங்கள் கொல்வதற்குரிய உபாயத்தைத் தாங்களே கூறியருள வேண்டும்!"

"பெண் தன்மை கொண்ட சிகண்டியை எதிர்த்து நான் போரிடமாட்டேன். எனவே சிகண்டியை முன்னிறுத்திக் கொண்டு என்னுடன் நீங்கள் போரிட்டால் உங்களுக்கு வெற்றி நிச்சயம்!"

*"ஆற்றாது வந்து அடிபணியுமாப் போலே"* என்று ஸ்ரீஆண்டாள் தன் திருப்பாவையில் பாடியது போல, தாங்கள் கொல்ல முடியாத பீஷ்மரிடமே சென்று, அவரை எப்படிக் கொல்வது என்று தரும புத்திரர் கேட்டதும், இந்த விதமாக என்னைக் கொல்லலாம் என்று பீஷ்மரும் வழிகாட்டியதற்குக் கூட அவ்வெம்பெருமானின் திவ்ய சங்கல்பமே காரணமாகும்.

மகாபாரதப்போரில் பத்தாம் நாள் அர்ஜுனனின் தேரில் அவனை மறைக்கும் விதமாகச் சிகண்டி ஆரோகணித்திருக்க அர்ஜுனன் பின்னணியில் இருந்தபடியே கணைகளைத் தொடுத்தான்.தம்மை நோக்கிச் சிகண்டி விடுத்த பாணங்களுக்கு எதிர்வினை ஆற்றாத பீஷ்ம பிதாமகர், அர்ஜுனனின் பாணங்களுக்கு மட்டும் எதிர்க்கணை தொடுத்தார்.

நேரம் செல்லச் செல்ல, "நீ விருப்பப்படும் போது மட்டுமே மரணத்தை அடைவாய்" என்று தந்தை தமக்களித்த வரத்தை நினைவு கூர்ந்த பீஷ்மருக்கு வாழ்க்கையின் மீதான பற்று மெல்ல மெல்ல அறுபடுகிறது.

சிகண்டி, அர்ஜுனன் ஆகிய இருவரும் தொடுக்கின்ற அம்பு மழையால் தம்முடைய மேனி முழுவதும் துளைக்கப்பட்ட பீஷ்மர் அந்தப் பத்தாம் நாள் போரின் முடிவு நெருங்கிக் கொண்டிருந்த மாலை வேளையில் தமது தேர்த் தட்டிலிருந்து கீழே விழுந்தார்.

அர்ஜுனன் அம்புகளால் கட்டிய படுக்கையில் படுத்திருந்தபடி உடல் வலியைப் பொறுத்துக் கொண்டிருந்த படியே காத்திருந்த பீஷ்ம பிதாமகர், உத்தராயணம் பிறந்தவுடன் தம்முடைய இன்னுயிரை நீத்தார்.

## தியான சுலோகங்கள்

கர்மணா மநஸா வாசா
ப்ராணிநாம் யோ ந ஹிம்ஸக: |
பாவ பக்தச்ச கோவிந்தே
தைத்ய பாகவதோ ஹி ஸ: ||

தன் உயிரைக் காப்பது போலவே மற்ற உயிர்கள் இடத்திலும் அன்புடன் நடந்து கொள்ள வேணும். எல்லா உயிர்களிடத்திலும் தெய்வம் உள்ளது என்பதை தெரிந்துக் கொண்டு தீமை செய்தல் ஆகாது.

**தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.**



# ஏழுமலை

*ஏழுமலையும் ஏறிச் சென்றால்*
*இறைவனைக் கண்டிடலாம் - அவன்*
*நாமம் கூறி நாளும் வணங்கிட*
*நன்மைகள் பெற்றிடலாம்!*

*(ஏழுமலை)*

*கருணைக்கடலே கலியுகவரதனே*
*கண்கண்ட தெய்வமய்யா - அவன்*
*கார்மழைபோலே அருளைப் பொழிந்து*
*காத்திடும் வள்ளலய்யா!*

*சங்குடன் சக்கரம் கொண்டவனே*
*சங்கடம் தீர்க்கும் வேங்கடவனே - அவன்*
*சன்னதிசென்று சரணமடைந்தால்*
*சகலமும் தருவான் அவனே!*

*கோவிந்தா, கோவிந்தா, கோவிந்தா!*

*(ஏழுமலை)*



*கவிமாமணி துரை, இராசமாணிக்கம்*
*திண்டிவனம் தமிழ்ச்சங்கம்,*
*94432 25940*

பீஷ்மரின் முடிவுக்குக் காரணமாய் விளங்கிய சிகண்டி, மகாபாரதப் போரின் கடைசி தினத்தில் அஸ்வத்தாமனால் கொல்லப்பட்டதும் எம்பெருமாான் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா வின் சங்கல்பம் என்று தான் கூற வேண்டும். பீஷ்மரை கொல்வது என்ற ஒரே நோக்கத்துடன் பிறந்த சிகண்டியின் நோக்கம் நிறை வேறிய சில நாட்களில் இறந்து போனதற்கும், தாங்கள் பிறந்த நெடுநாட்களுக்குப் பின் துரியோதனா திகளைப் பழி தீர்ப்ப தாகச் சபதம் ஏற்ற பீமனும், திரௌபதியும் அதன் பின்னர் நீண்ட காலம் உயிர் வாழ்ந்ததற்கும் எம்பெருமான் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் சங்கல்பத்தையன்றி வேறு எந்தக் காரணமும் இருக்க வாய்ப்பில்லை.

நிற்க. அம்பை என்ற அபலைப் பெண் தன்னுடைய திருமணக் கனவை நிறை வேற்றிக் கொள்ள முடியாத நிலையில், அதற்குக் காரணமான மகாபலசாலி பீஷ்மபிதாமகரைத் தன்னுடைய அடுத்த பிறவியில் பழிதீர்த்தாள் என்று ஒரே வாக்கியத்தில் இந்தச் சரித்திரத்தைக் கூறி முடிப்பது வெகு சுலபம்.

ஆனால், ஒரு பெண்ணின் கண்ணீருக்குக் காரணமானவர்கள் எத்தனை பிறவி எடுத்தாலும் அதற்குரிய தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும் என்ற மறக்க முடியாத பாடத்தை இந்த சரித்திரம் கற்பிக்கிறது என்றதால் அது மிகையல்ல.

“ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்” என்று இக்கலியுகத்தின் காவியமாகிய சிலப்பதிகாரம் கூறியதை, துவாபர யுகத்தின் மகத்தான இதிகாசமாகிய மகாபாரதம் மிகவும் ஆழமாகவே நமது இதயங்களில் பதிய வைக்கின்றது என்பதை உணரும்போது நம்முடைய நெஞ்சங்கள் பெருமிதத்தில் திளைக்கின்றன.



# ஜூன் 2022
# ராசிப் பலன்கள்



- சேலம் முராரி. எம்.வி. நரநாராயணன், 94422 86213.

**மேஷம்**

வெளிநாட்டு பிரயாணம், தெய்வீக யாத்திரை போன்ற சுபச்செலவுகள் கூடும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். தொழில் துறையில் நல்ல லாபமும், உத்தி யோகஸ்தர்கள் பதவி உயர்வு பெற்று இடமாற்றமும் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேற்றுமைகள் விலகும். வீடு மனை வாங்கும் யோகம் உண்டு.

**ரிஷபம்**

தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். பூமி லாபம் உண்டு. மனைவி, குழந்தைகள் மூலம் தனலாபம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். குடும்பத்தில் தனக்காகவோ, தன் குடுப்ப உறுப்பினர்களுக்கோ சுபகாரியங்கள் நடக்கும். செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு உண்டு. மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு.

**மிதுனம்**

குடும்பத்தில் செலவினங்கள் அதிகம் உண்டு. உடல் உஷ்ணம், கண்களுக்கு சிறு பாதிப்பு ஏற்பட்டு சரியாகும். குழந்தைகளின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். பெண்களால் ஏற்றம் உண்டு. சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும். கஷ்டப்பட்டு வேலைவாய்ப்பை பெறுவார்கள்.

**கடகம்**

மனைவியின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குழந்தைகளுக்கு கல்வி, தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டு. சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். பூர்வீக சொத்துக்கள் விரைவில் கிடைக்கும். தந்தை ஆரோக்கியம் நன்றாக இருந்தாலும், தாயின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**சிம்மம்**

வயிற்றில் உஷ்ணம் ஏற்படும். தொழில் துறையில் புது முயற்சிகள் செய்யலாம். பண விஷயத்தில் எச்சரிக்கை தேவை. திருஷ்டியால் முன்னேற்றம் பாதிக்கும். குழந்தைகள் மேற்படிப்புக்காக வெளியூர் செல்வார்கள். இளைய சகோதரனுக்கு ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. காரமான, அஜீரணம் ஏற்படுத்தும் பொருட்களைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி**

தொழில் துறை விருத்தி உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். தெய்வஸ்தலங்களுக்கு யாத்திரை செய்து நல்ல தரிசனம் கிடைக்கப் பெறுவர். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. போட்டியில் வெற்றி கிடைக்கும். எதிரிகளை எளிதில் வெல்வீர்கள். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள்.

**துலாம்**

ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. கணவன்-மனைவிக்குள் சிறு உரசல்கள் ஏற்பட்டு பிறகு சரியாகும். தாயின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தந்தையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இம்மாதம் பணவிரயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**விருச்சிகம்**

வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகமுண்டு. குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றமுண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தாயின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தந்தையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன்-மனைவி பிரச்சனை தீரும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

**தனசு**

நண்பர்கள் உறவினர்கள் உதவி செய்வர். தைரியமாக எதையும் செய்து வெற்றி பெறுவர். மாணவர்கள் கடுமையாக உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெறுவர். புதியதாக வாகனம் வாங்கும் யோகம் உண்டு. திட தேக ஆரோக்கியத்தைப் பெறுவார்கள். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**மகரம்**

தொழில் துறையில் இருந்த வேலைப்பளு குறையும். இளைய மூத்த சகோதரர்களுக்கு நன்மை உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். குழந்தைகளுக்கு நல்ல ஆரோக்கியம் உண்டு. தொழிலில் நல்லவிதமாக இடமாற்றம் உண்டு. திடீர் தனவரவு உண்டாகும். மனப்பாரம் குறையும்.

**கும்பம்**

வேலைப்பளு அதிகமாகும். தொழில் துறையில் நல்ல தனலாபம் உண்டு. சகோதர வழியில் நன்மை உண்டு. மாணவர்கள் கடுமையாக உழைத்து நல்ல மதிப்பெண்கள் பெறுவர். புதிதாக வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். செலவினங்கள் குறைந்து சேமிப்பு அதிகமாகும்.

**மீனம்**

எந்தக் காரியத்திலும் முதல் முயற்சியில் தடையும், இரண்டாவது முயற்சியில் வெற்றியும் உண்டாகும். செலவினங்கள் அதிகமாகும். அதற்குரிய வருமானத்தையும் பெறுவார்கள். மனைவி, குழந்தைகளின் ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகள் விலகும். தெய்வஸ்தலங்களுக்குச் சென்று நல்ல தரிசனம் கிடைக்கப் பெறுவீர்கள்.



ஆயுர்வேதம்

# வெண்டைக் காய்

தெலுங்கு மூலம்
டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390

தமிழாக்கம்
திருமதி வி.உஷா, 99850 02156

நமக்கு ஆண்டுதோறும் பலவகையான காய்கள் கிடைக்கின்றன. அவற்றில் ஒன்றான வெண்டைக் காயின் மருத்துவகுணத்தை அறிந்து கொண்டு அதன் பயனைப் பெறுவோம். வெண்டைக்காயினால் சட்னி, பொறியல், காரக்குழம்பு, சாம்பார் போன்ற பல சுவையான உணவுகளை தயாரித்து உண்கிறோம். இக்காய் பலவிதமான நோய்களைப் போக்கும் தன்மை கொண்டது. அவற்றைப் பற்றி தெரிந்து கொண்டு ஆயுள் ஆரோக்கியத்தைப் பெறுவோம்.

**முழங்கால் வலியைப் போக்க:**

நாள்தோறும் ஒரு முறை 250 மி.லி. நீரில் 4 அல்லது 5 வெண்டைக்காயினை பெரிய பெரிய துண்டுகளாக நறுக்கிப் போட்டு 100 மி.லி. நீராகும் வரை நன்கு கொதிக்க வைத்து, ஆறியபின் வடிகட்டி குடித்தால் முழங்கால் வலி குறையும். இந்த கஷாயத்தை வாயில் போட்டு கொப்பளித்து உமிழ்ந்தால் வாய்ப்புண், தொண்டைவலி ஆகியவை குறையும்.

**பொடுகு தொல்லை நீங்க :**

வாரத்தில் 2–3 முறை இரவு நேரம் வெண்டைக் காயின் சாரினை தலைக்குத் தடவி சிறிது நேரம் கழித்து தலைக்குளியல் செய்தால் பொடுகுத் தொல்லை தீரும்.

**வயிற்றில் எரிச்சல் குறைய :**

நாள்தோறும் ஒரு முறை 250 மி.லி. நீரில் 4–5 வெண்டைக்காயினை சிறு துண்டுகளாக நறுக்கி 100 மி.லி. நீர் ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து, ஆறியபின் வடிகட்டி அதில் ஒரு டீஸ்பூன் தேன், 2 சிட்டிகை சைந்தவலவனம் பொடி கலந்து உட்கொண்டால் மலமூத்திர துவார எரிச்சல், வயிற்று எரிச்சல் ஆகியவை குறையும்.

**வெள்ளைப்படுதல் குறைய :**

நாள்தோறும் காலை, மாலை இரண்டு வேளை –விதையில்லாமல் இருக்கும் இளைய வெண்டைக் காயை சர்க்கரையுடன் கலந்து சாப்பிட்டால் பெண்களுக்கு இப்பிரச்சனை குறையும். மேலும் கண், உடல் முதலியவற்றில் ஏற்படும் எரிச்சல் தீரும்.

**முகப்பரு குறைய :**

நாள்தோறும் ஒரு முறை வெண்டைக்காய் இரசத்தை முகத்தில் பூசிக்கொண்டு ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் கழித்து முகத்தை வெதுவெதுப்பான நீரினால் கழுவிக் கொண்டால் முகப்பொலிவு பெற்று மிருதுவாகக் காணப்படும்.

**சர்க்கரை வியாதி குறைய :**

நாள்தோறும் இரவு 2–3 வெண்டைக்காயை எடுத்துக் கொண்டு நீளவாட்டில் அறுத்து 200 மி.லி. நீரில் போட்டு காலையில், வடிகட்டி அந்த நீரில் ஒரு கிராம் மிளகுப்பொடி சேர்த்து உட்கொண்டால் சர்க்கரை வியாதி குறையும். இதனால் இன்சுலின்

மற்றும் மாத்திரைகளின் அளவு குறைக்க வாய்ப்புகள் உண்டு.

**முடி நன்கு வளர :**

வாரத்திற்கு இரண்டு முறை 200 மி.லி. நீரில் 3–4 வெண்டைக்காயை நறுக்கி போட்டு நன்கு கொதிக்க வைத்து வடிகட்டி அந்த நீரை தலைக்குத் தடவினால் முடி நன்கு அடர்த்தியாக வளரும்.

**மலச்சிக்கல் குறைய :**

7–10 வெண்டைக்காயை (பெரிது பெரிதாக) பெரிய துண்டுகளாக நறுக்கி சிறிதளவு நீர் கலந்து நன்கு கொதிக்க வைத்து அதில் 2–3 கிராம் சீரகப்பொடி, 2–3 கிராம் கொத்தமல்லிப் பொடி மற்றும் 2–3 சிட்டிகை உப்பு சேர்த்து இரவு படுக்கும் முன் உட்கொண்டால் மலச்சிக்கல் தீரும்.

**வயிற்றுப் போக்கு குறைய :**

நாள்தோறும் காலை மாலை வேளைகளில் 200 மி.லி. நீரில் மூன்று வெண்டைக்காயை பெரிய பெரிய துண்டுகளாக நறுக்கி போட்டு அரை டீஸ்பூன் பனங்கல்கண்டு சேர்த்து 100 மி.லி. நீர் ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து ஆறிய பின் குடித்து வந்தால் வயிற்றுப்போக்கு குறையும். (ஆண்டிபயோடிக்) நுண்ணுயிர் கொல்லி மருந்துகளினால் ஏற்படும் பக்க விளைவுகளை தடுக்க நாள்தோறும் ஒரு முறை 100 மி.லி. மோரில் 50 கிராம் வெண்டைக்காய் சாறு, பழுத்த வாழைப்பழம் சாறு முதலியவற்றை சேர்த்து உட்கொண்டால் ஆண்டிபயோடிக் மருந்துகளால் ஏற்படும் பக்க விளைவுகளைத் தடுக்கலாம். குடல் சம்பந்தப்பட்ட வியாதிகள் வராமலும் காக்கலாம். நீரிழிவு (சர்க்கரை) நோய் உள்ளவர்கள் வாழைப் பழத்தை சேர்க்காமல் உட்கொள்ள வேண்டும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவேத் தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்விற்கு அல்ல.



## ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்பளாயகுண்டா

**திருவேங்கடமுடையான் ஆகாசராஜாவின் மகளான ஸ்ரீபத்மாவதி தேவியை நாராயண வனத்தில் திருமணம் செய்து கொண்டபிறகு, எம்பெருமான் பத்மாவதி தேவியுடன் திருமலைக்குப் புறப்பட்டார். திருமலைக்கு வரும் வழியில் சித்தேஸ்வர ஸ்வாமி என்பவர் திருவேங்கடவனை நினைத்து தவம் புரிந்தார். அந்த தவத்திற்கு மனமிறங்கி எம்பெருமான் அபய திருக்கரங்களுடன் எழுந்தருளி தரிசனமளித்ததாக தல புராணம் கூறுகின்றது.**

**1988 ஆம் ஆண்டு முதல் இந்த ஆலயத்தை தி.தி.தேவஸ்தானம் நிர்வகித்து வருகின்றது. சனிக்கிழமை, திருவோண நட்சத்திரம், பிரம்மோத்ஸவம் நாட்களில் பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் திரளாக இங்கு வருவர்.**

## இதில் பொருந்தாதது எது?









குறிப்பு : க்ருஹப்பிரவேசம், இறைவனோடு தொடர்புடைய பறவை, வாகனம், இறைவனுக்கு உகந்த பூ இவற்றிற்கு தொடர்பு இல்லாதவற்றை கட்டத்தில் எழுதவும்.

## இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்



1) மணமகன் நெற்றிப்பட்டம்
2) மணமகன் வலது கை ஆபரணம்
3) மணமகன் பெல்டு சலங்கை
4) மணமகன் வேஷ்டியில் சரிகை
5) மணமகள் திரை
6) மணமகள் கை ஆபரணம்
7) மணமகள் சூரிய சடைவில்லை

நீதிக்கதை

# வாழ்முறைக்கான

# கீதை

**திருமதி பா. காயத்ரி, சென்னை.**

கணேஷுடைய மனதில் கேள்விகள் எழ அவனுடைய பாட்டி ஜானகி அதற்கு மிக எளிமை கருத்துடன் கூடிய பதிலை சொல்லுவர். ஒருநாள்...

கணேஷ் : பாட்டி, அம்மா யாரிடமோ "பகவத் கீதை" என்று பேசி கொண்டு இருந்தார்கள். ... "பகவத் கீதை" என்றால் என்ன?

பாட்டி : கணேஷ் "பகவத்" என்றால் "பகவான்", "கீதை" என்றால் பாட்டு அதாவது பகவான் பாட்டு என்று பொருள்.

கணேஷ் : அப்போது பகவான் நிஜமாக பாட்டு பாடினாரா பாட்டி?

பாட்டி : கணேஷ் இங்கே பாட்டு என்றால் "சுலோகம்" என்று பொருள்.

கணேஷ் : பகவான் யாருக்கு சுலோகத்தை சொன்னார்.

பாட்டி : பகவான் கீதையை அர்ஜுனனுக்கு சொன்னார்.


கணேஷ்: பாட்டி, பகவான் ஏன் அர்ஜுனனுக்கு மட்டும் சொன்னார்?

பாட்டி : கணேஷ், பகவான் அர்ஜுனன் மூலம் கீதையை உலகிற்கே கூறினார்.

கணேஷ்: அப்படியா! எதுக்காக பகவான் அர்ஜுனனுக்கு கீதையைக் கூறினார்.

பாட்டி : அது ஒரு பெரிய கதை! துவாபர யுகத்தில் "குரு வம்சம்" என்ற ஒரு ராஜ பரம்பரை இருந்தது. அண்ணன் திருதராஷ்டிரன் குருடனானதால் பாண்டு அரசனானான். சாபத்தின் விளைவால் பாண்டு மாண்டு விட அவன் அண்ணன் திருதராஷ்டிரன் அரசன் ஆனான். பாண்டுவுக்கு "பாண்டவர்கள்" என்று அழைக்கப்பட்ட 5 புதல்வர்களும், த்ருதராஷ்டிரனுக்கு "கௌரவர்கள்" என்று அழைக்கப்பட்ட 100 புதல்வர்களும் இருந்தனர். இப்போ, பாண்டவர்களில் மூத்தவனான யுதிஷ்டிரன், தர்மப்படி ஆட்சி செய்ய நாடு கேட்க, அவனுக்கு காடு மேடாக அரக்கர்கள் நிறைந்த நாடு ஒன்று தரப்பட்டது. ஆனால் பாண்டவர்கள் தம் திறமையால் அதை பசுமை, செழுமை மற்றும் ஐச்வர்யம் நிறைந்த நாடாக மாற்றி ஆட்சி செய்தனர். அதனால் பொறாமை கொண்ட துரியோதனன் (கௌரவர்களில் மூத்தவன்) தம் மாமா சகுனியுடன் கூடி சூதாட்டத்தில் ஏமாற்றி, பாண்டவர்களிடமிருந்து அனைத்தையும் அபகரித்தனர்.

அதுமட்டுமின்றி



அவர்களை 13 ஆண்டு வனவாசம் அனுப்பினார்கள்.

கணேஷ் : இதில் கீதை எதுக்காக சொல்லப்பட்டது?

பாட்டி : பொறு கணேஷ் கதை இன்னும் முடியவில்லை. வனவாசத்திலிருந்து திரும்பி வந்து பாண்டவர்கள் தனது நாட்டை கேட்க, கௌரவர்கள் அதனை மறுத்து, ஒரு ஊசி முனையளவு நிலம் கூட தர மாட்டேன் என்று தூதனாக வந்த ஸ்ரீகிருஷ்ணனிடம் கூறி அனுப்ப, அதன் விளைவாகத்தான் மகாபாரதப் போர் மூண்டது. போர் ஆரம்பிக்கும் க்ஷணம் நேரம் முன்னதாக அர்ஜுனன் தன்னால் தன் உறவினர்கள் கொல்ல முடியாது என்று தன்னுடைய தனுசை கீழே போட, ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா தர்மத்திற்காகப் போரிட அவனுக்கு உபதேசித்தார்.

அவ்விருவரின் இடையே நடந்த உரையாடலே பகவத் கீதை என்றழைக்கப்படுகிறது.

கணேஷ்: அப்போ... பகவத் கீதை போரிடப் போகின்றவர்கள் படிக்க வேண்டும் சரியா?

பாட்டி : அப்படியல்ல! இந்த உலகத்தில் இருக்கின்ற அனைத்து மனிதர்களும் படிக்க வேண்டும்.

கணேஷ்: அது எப்படி? நான் போரிட போவதில்லையே?

பாட்டி: இங்கே போர் என்பது நாம் தினமும் ஒவ்வொரு முடிவும் எடுக்க நடத்தும் போரைக் குறிக்கும். அதாவது, நான் இதை செய்யலாமா? இது தர்மமா? முதலியன.

மேலும், அறம், பொருள், இன்பம், வீடுபேறு எனும் மானிடர்களுக்கான நால் வகை நோக்கங்களையும், சமுகத்துடன் இருக்க வேண்டிய உறவு முறைகளைப் பற்றியும் கூறி வாழ்முறைக்கான கீதையாகத் திகழ்கிறது. எனவே நீயும் இதனை படித்து வாழ்வில் முன்னேற முயல வேண்டும்.

கணேஷ்: சரி பாட்டி. நானும் கீதையைப் படித்து நல்வாழ்வுதனைப் பெறுவேன். நன்றி பாட்டி.

**ஜ்யேஷ்டாபிஷேகத்தின் முதல் நாள், நண்பகல் பூஜைக்குப் பிறகு உபயதேவிமார்கள் உடனுறை திருமலையப்ப ஸ்வாமி விமான பிராகாரத்தில் உலா வந்து பின், சம்பங்கி பிராகாரத்தில் 108 குட "அஷ்டோத்ர சத கலச ஸ்நபன திருமஞ்சனம்" ஜ்யேஷ்ட சுக்ல திரயோதசியில் துவங்கி ஜ்யேஷ்ட சுக்ல சதுர்த்தசி வரை நடைபெறும். பின்னர், எம்பெருமானும் திருமலையிலுள்ள கல்யாண மண்டபத்தில் எழுந்தருளுவார். அங்கிருக்கும் அக்னி குண்டத்தில் வேத பாரம்பரியத்தின்படி தேவதா பிரார்த்தனை, விஷ்வக்சேன ஆராதனை, ஸ்வஸ்தி புண்யாஹவசனம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம் மற்றும் அக்னி ப்ரணயனம் முதலிய அனுஷ்டானங்கள் செய்யப்படும். உத்ஸவ மூர்த்திகளுக்கு பால், தயிர் என 12 திவ்ய திரவியங்களால் ஸ்நபன திருமஞ்சனமும், மாலையில் உபயதேவிமார்கள் உடனுறை திருமலையப்ப ஸ்வாமி வைர கவசத்துடன் நான்கு மாட வீதிகளில் உலா வருவார். ஜ்யேஷ்டா பிஷேக உத்ஸவத்தின் போது மட்டுமே ஸ்வாமி தனது நிஜ உருவில் எவ்வித கவசமுமின்றி பக்தர்களுக்கு காட்சியளிப்பார். இவ்வுத்ஸவத்தின்போது மட்டுமே பகவானுக்கு அடி முதல் முடி வரை அபிஷேகம் செய்யப்படும். ப்ருகு மகரிஷியின் "ப்ரகீர்ணாதிகார" என்னும் நூலின்படி இந்த ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவத்தின் குறிக்கோள் பகவானின் நிஜ உருவத்தையும், அவரது தங்கக்கவசத்தையும் பாதுகாப்பதேயாகும்.**



# ஸ்ரீநம்மாழ்வார் சித்திரக் கதை

கதை மூலம் : திரு. ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு
சித்திரம் : திரு. கே. துளசி பிரசாத்




தன் மீது பாடிய பாசுரங்களைக் கேட்டு ஶ்ரீரங்கநாதர் மெய் மறந்து திருக்காட்சியளித்து...
ஆழ்வாரே! நீ என்னை துதிக்காவிடில் எனக்கு உறக்கமில்லை. நீர் எம் ஆழ்வார் நம்மாழ்வார்.
இது என் பாக்கியம் ஸ்வாமி!
நம்மாழ்வாரின் அந்திம காலம் நெருங்கியது. அப்பொழுது ஶ்ரீரங்கநாதர் எதிரே தோன்றி...
ஆழ்வாரே! என்ன வேண்டும் கேளுங்கள்.
எனக்கெதுவும் வேண்டாம் ஸ்வாமி. அனைவருக்கும் தங்கள் அருள் கிடைத்தல் வேண்டும்.
எவ்வகையில் கூறு.
ஸ்வாமி! தங்கள் பாதுகையை என் தலை மீது வைத்து அந்த உம் திருவடியாகிய சடகோபத்தால் பக்தர்களுக்கு புண்ணியத்தை அளித்தல் வேண்டும்.
ஆழ்வாரே! இனி சடகோபனென்றும் உம்மை அழைக்கட்டும்!
உம்மை தன்னலமற்று உலக நன்மைக்காக உதித்தவர் என்பதை உலகம் அறியட்டும்.
சடகோப முனி, பராங்குசன், வகுளாபரணன், திருக்குருகூர் நம்பி என்று அழைக்கப்பட்டார் நம்மாழ்வார்.
அடுத்த இதழில் வேறொரு கதையைப் பார்த்து படித்து மகிழலாம்.
முற்றும்.

# பல்சுவை பகுதி

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



## பொருத்துக...

1. காமதேனு - அ. நம்மாழ்வார்
2. சடாரி - ஆ. பாண்டவர்
3. பீமன் - இ. அஞ்சனை
4. அனுமன் - ஈ. குந்தி
5. கர்ணன் - உ. கோமாதா

1.உ, 2.அ, 3.ஆ, 4.இ, 5.ஈ.



## பாடல் அறிவோம்...


*"வினா வேங்கடேசம் ந நாதோ ந நாதஃ
ஸதா வேங்கடேசம் ஸ்மராமி ஸ்மராமி
ஹரே வேங்கடேச ப்ரஸீத ப்ரஸீத
ப்ரியம் வேங்கடேஸ ப்ரயச்ச ப்ரயச்ச"*

- ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்தோத்ரம்

## வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

இனத்தை பசு நம் காப்பதுசொத்தாகும் மிகப் பெரிய செய்யும் நாம் சந்ததியருக்கு

பசு இனத்தை காப்பது நம் சந்ததியருக்கு நாம் செய்யும் மிகப் பெரிய சொத்தாகும்.



## பாதையைக் கண்டுபிடி

கோமாதா, காமதேனு என்று அழைக்கப்படும் இந்த பசுக்கள் நம் மானிட இனத்திற்கு ஓர் வரப்பிரசாதமாகும். இந்த பசுவோடு கூடிய கன்றுக்குட்டிக்கு புற்கள் நிறைந்த நந்தவனத்திற்கு வழிக்காட்டிடுங்கள்.

## விடுகதை பகுதி...

1. எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல்; அது எது?
2. செய்தி வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே; அது எது?
3. ஊரெல்லாம் சுற்றுவேன், வீட்டிற்குள் வரமாட்டேன்; நான் யார் ?

1.விக்கல், 2.தொலைபேசி 3.செருப்பு

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.




05.05.2022 அன்று திருப்பதியில் ஸ்ரீவேங்கடேஸ்வரா இன்ஸ்டிடியூட் ஆப் கேன்ஸ்சர் கேர் & ரிசர்ச் (எஸ்.வி.சி.சி.எ.ஆர்) மருத்துவமனையைத் துவக்கி வைத்த மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்கள்





05.05.2022 அன்று திருப்பதியில் ஸ்ரீபத்மாவதி குழந்தைகள் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டி பூமி பூஜை செய்த மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்கள்




05.05.2022 அன்று திருப்பதியில் எஸ்.வி.பி.சி. சேனலின் இணைய தள வானொலி சின்னத்தை வெளியிட்ட ஆந்திர மாநில முதல்வர்




05.05.2022 அன்று திருப்பதியில் ஸ்ரீநிவாச சேது மேம்பாலத்தை துவக்கி வைத்த ஆந்திர மாநில முதல்வர்



05.05.2022 அன்று மறுபுனர் அமைக்கப்பட்ட "ஸ்ரீவாரி மெட்டு" நடைபாதையைத் துவக்கி வைத்த தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத்தலைவர்



29.04.2022 அன்று பதவி அடிப்படையில் பொறுப்பாண்மைக்குழு உறுப்பினராக பதவியேற்ற ஆ.மா.முதன்மைச் செயலாளர் (வருவாய் & இந்து சமய அறநிலையத்துறை) திரு. அனில்குமார் சிங்ஹால் ஐ.ஏ.எஸ். அவர்கள்



08.05.2022 அன்று டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்களிடமிருந்து திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள் செயலாட்சித் தலைவராக (கூடுதல் பொறுப்பு) பதவி ஏற்றபோது...

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-05-2022 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

